# சித்தர் நெறி

மெய்ஞ்ஞானக்கொடி மெய்ஞ்ஞானக்கொடி

சீவநெறி => சிவநெறி => சைவநெறி => மெய்யான இந்துமதம்

## 12வது பதினெண்சித்தர் பீடாதிபதி ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரூர் அவர்கள் அருளியவை



12வது பதினெண்சித்தர் பீடாதிபதி

மாசி மாத வெளியீடு (February-March 2013)
மெய்யான இந்துமத ஆண்டு 43,73,114

# வடலூர் வள்ளலாருக்காக மறு சிந்தனை

காணிக்கை ரூ.4/-



வடலூர்ப் பெருவெளிப் பெருந்தகை, திருவருட்பிரகாச அருட்பெருஞ்சோதி ஆண்டவர், திருவருட்பா அருளிய அருட்கொடை வள்ளல், வடலூர் இராமலிங்க அடிகளார்

# உள்ளுறை

**இந்த இதழில் வடலூர் அருட்பெருஞ்சோதி இராமலிங்க அடிகளாரின் மெய்யான வரலாற்றை குருதேவர் அருளிய அஞ்சல் வடிவக் கட்டுரை மூலம் வழங்குகின்றோம். (பக்கம் 3 முதல் 31 வரை)**

**இந்தக் கட்டுரையை எழுதத் தூண்டிய ஆன்மநேய பத்தர் ஈரோடு திரு கதிர்வேல் என்பவரின் அஞ்சல் இதழின் இறுதியில் (பக்கம் 32இல்) உள்ளது.**

**பின் உள் அட்டையில் வடலூர் இராமலிங்க அடிகளாரைப் பற்றிச் சுருக்கமாகக் குருதேவர் கூறியன உள்ளன.**

# வடலூர் வள்ளலாருக்காக
# மறு சிந்தனை

***அருளியவர்:***

ஞாஞச்சாரியார், இந்துமதத் தந்தை,
இந்துவேத நாயகம், இந்துவேத பீடம்
இந்துமதத் தலைமை ஆச்சாரியார்
இந்துமதத் தலைமைக் குருபீடம், குருமகாசன்னிதானம்
ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர்
பதினெண்சித்தர் மடம், காரனேடை, சென்னை - 67

***பெறுநர்:***

அருள்மிகு வடலூர் அருட்பெருஞ்சோதி ஆண்டவர் இராமலிங்க அடிகளார் பத்தர்
ஈ.செ. கதிர்வேல்
சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம் (சங்கங்களின் கட்டமைப்பு, வடலூர்)
மத்திய மாநில இளைஞரணிச் செயலாளர்
821, பிரப் ரோடு, ஈரோடு - 638 001, பெரியார் மாவட்டம்

*வடலூர்ப் பெருவெளிப் பெருந்தகை, திருவருட்பிரகாச அருட்பெருஞ்சோதி ஆண்டவர், திருவருட்பா அருளிய அருட்கொடை வள்ளல், சுத்த சன்மார்க்க சங்கத் தலைவர், வடலூர் இராமலிங்க அடிகளார் பத்தர், உயர்திரு ஈ.செ. கதிர்வேல், சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம் (சங்கங்களின் கட்டமைப்பு வடலூர்) மத்திய மாநில இளைஞரணிச் செயலாளர் அவர்கள் சமூகத்திற்கு*

*உலக ஆன்ம நேய ஒருமைப்பாட்டுத் தத்துவ நாயகம், இந்துவேத பீடம், இந்துவேத நாயகம், இந்து மதத் தந்தை, இந்துமதத்தின் தலைமை ஆச்சாரிய மடமான பதினெண்சித்தர் மடத்தின் மடாதிபதி, இந்துமதத்தின் தலைமைக் குருபீடமான பதினெண்சித்தர் பீடம், குவலய குருபீடம், குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர் அவர்களின் திருவுளக் குறிப்பறிந்து பதினெண் சித்தர் மட அறக்கட்டளை (பதிவு எண் 798/4, 1991, எண்-3, என்.சி.ஓ. நகர், பொன்னேரி - 601204) நிர்வாக அலுவலகத்திலிருந்து எழுதப்படும் பதில் திருவோலை:*

1) தங்களின் தேதி குறிப்பிடப் படாத (ஈரோட்டு அஞ்சலக முத்திரையில் -8-91 என்று மாதமும் ஆண்டும் குறிப்பிடப் பட்டிருக்கிறது) அஞ்சல், காரணேடை பதினெண்சித்தர் மடம் முகவரிக்கு அனுப்பப்பட்டது, காலதாமதமாக 12-10-91 அன்று மடத்துப் பணியாளரால் அலுவலகத்திற்கு (13, குமாரசாமித் தெரு, வரதராாசபுரம், அம்பத்தூர், சென்னே - 53) கொண்டு வந்து தரப்பட்டது. நெடிய வெள்ளேத் தாளில் நான்கு பக்க அளவில் விரிவாக எழுதப்பட்ட அஞ்சல், குருமகா சன்னிதானத்திற்கு படித்துக் காட்டப்பட்டது. திருமடத்தின் குருமகா சன்னிதானம், தாங்கள் வழிபடும் வடலூர் அருட்பெருஞ்சோதி ஆண்டவர் இராமலிங்க அடிகளாரின் குடும்பப் பாரம்பரியத்தில் வாழையடி வாழையென வந்தவர் ஆவார். எனவேதான், தங்களுடைய கள்ளங் கபடமற்ற சிறுகுழந்தை போன்ற உணர்வுக் குமுறலுக்கு உரிய ஆறுதலாகவும், தேறுதலாகவும், விரிவான பதில் எழுதியுள்ளார். தங்களேப் போன்று தமிழகத்திலுள்ள வடலூர் அருட்பெருஞ்சோதி ஆண்டவர் இராமலிங்க அடிகளாரின் பத்தர்கள் ஞான சித்தராகிய வள்ளல் பெருமானேப் பற்றி முறையாகத் தெரிந்து கொள்ளாமலும், அவர் அருளிய திருவருட்பா ஆறு திருமுறைகளேயும் சுமார் 12,000 பாடல்கள் என்று விரிந்த அருட்பா கடலினேப் பற்றி முறையாகப் படித்து நிறைவான புலமை எய்தி அனுபவப் பூர்வமான பொருளேக் கண்டறிந்து ***திருவருட்பா தத்துவத்தை முழுமையாகப் புரிந்து கொள்ளாமலும், .... "அவசரக் கோலம் அள்ளித் தெளித்தால் போதும்"*** என்று செயல்பட்டு வருவதால்தான்; ஆண்டுக்கொருமுறை தைப்பூசத்தைத் தவிர வள்ளல் பெருமாணுகிய வடலூராரை நினேப்பவரும்; தேடுபவரும் அதிகமாகிட முடியாமல் போய்விட்டது. அக்குறையைப் போக்கிடும் பணியை இந்துமதத்தின் தந்தையாகிய குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர் அவர்கள் துவக்கியுள்ளார் என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள், புரிந்து கொள்ளுங்கள்.

2) தமிழகத்தில் எழுத்தாளராக வாழுகின்ற பெருமக்களில் எழுத்தாளர் பி.சி.கணேசன் என்பவர் வடலூர் அருட்பெருஞ்சோதி ஆண்டவர் இராமலிங்க வள்ளல் பெருமாணுரைப் பற்றி மிகமிக இழிவாகப் பழித்து விமரிசனக் கட்டுரை எழுதியபோது, தமிழகத்தில் ஆயிரக் கணக்கில் இராமலிங்க அடிகளார் பெயரில் மன்றங்களும், சங்கங்களும், சபைகளும்,

திருக்கூட்டங்களும், பசனைக் கூட்டங்களும், அறக்கட்டளை நிறுவனங்களும், கல்விச் சாலைகளும், தனித்த பத்தியாளர்களும் இருந்தும் கூட; வடலூர் வள்ளல் பெருமானாரின் குடும்பப் பாரம்பரியத்தில் வந்த பதினெண் சித்தர் மடாதிபதிதான் அக்கட்டுரையாளரைக் கண்டித்தும், அக்கட்டுரைக்கு மறுப்பு எழுதியும் பல நூறாயிரக் கணக்கான (பல இலட்சக் கணக்கான) அறிக்கைகளும், அறிவிக்கைகளும் அச்சிட்டு வடலூர் தைப்பூச விழாவிலும், தமிழகத்தின் முக்கியமான கோயில் திருவிழாக்களிலும், முதன்மையான பெருநகர வீதிகளிலும் வழங்கினார், வழங்கினார், வழங்கினார். ஆனால் இன்றுவரை யாருமே அவரைப் பற்றி இழித்தும் பழித்தும் எழுதப்பட்ட கட்டுரைக்கு மறுப்போ அல்லது அக்கட்டுரையை எழுதிய ஆசிரியரைக் கண்டித்தோ அறிவிப்பு வெளியிடவில்லை, வெளியிடவில்லை, வெளியிடவில்லை, வெளியிடவே யில்லை. இப்பேருண்மையினை வள்ளல் பெருமானின் பத்தராகிய தங்களுடைய கருத்தின் நினைவுக்கு முதற்கண் தெரிவித்துக் கொள்கிறோம். ஏனென்றால், இன்றைக்கு நாட்டிலுள்ள வள்ளல் பெருமானுடைய பத்தர்களில் நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது பேர்கள் வள்ளல் பெருமானைப் பற்றி நிறைவாகத் தெரிந்தவர்களாகவும் இல்லை; வள்ளல் பெருமானார் அருளிய திருவருட்பாவை முழுமையாகப் புரிந்தவர்களாகவும் இல்லை. எனவேதான், வள்ளல் பெருமானும் அவருடைய திருவருட்பாவும், அவரது சுத்த சமரச சன்மார்க்க சங்கமும் தமிழகத்திலுள்ள சில மாவட்டங்களுக்குள் மட்டுமே மங்கி மறைந்த நிலையில் வாழ நேரிட்டு விட்டது. இதையும் தங்களின் கருத்தின் நினைவுக்கு முதற்கண் கொண்டு வர விரும்புகிறோம்.

3. தங்களுடைய அஞ்சலில் முதல் பக்கத்திலிருந்து கடைசி வரை மொத்தம் இருபது பாராக்கள் இருக்கின்றன. முதல் பக்கத்தில் 7 பாராக்களும் (1-7), இரண்டாம் பக்கத்தில் 3 பாராக்களும் (8-10), மூன்றாம் பக்கத்தில் 6 பாராக்களும் (11-16), நான்காம் பக்கத்தில் 4 பாராக்களும் (17-20) இருக்கின்றன. இவற்றில் மிகமிகப் பெரிய கருத்துப் பிழைகளாகக் காணப்படுபவை மட்டுமே இங்கு குறிக்கப்பட்டு விமரிசிக்கப் படுகின்றன, விளக்கங்கள் அளிக்கப் படுகின்றன. மற்றவற்றிற்கு, தாங்கள் பேரார்வம் காட்டினால் நேரிலேயே விளக்கங்கள் வழங்கப் படும். இந்த விளக்க அஞ்சல் வழக்கம் போல் பல நகல்கள் எடுக்கப் பெற்று பலருக்கும் அனுப்பப் படும். வசதி வாய்ப்புகள் ஏற்படும்

போது, தங்கள் அஞ்சலையும் இப்பதிலோடு சேர்த்து இப் பதினெண் சித்தர் மடத்தால் அச்சிடப் பட்டு இந்து இலக்கியக் கழகத்தின் மூலம் (ஐ.எல்.எஸ்) வெளியிடப்படும் என்ற செய்தியும் இப்பொழுதே தங்களுக்குத் தெரிவிக்கப்பட்டு விடுகிறது.

4. தாத்தாக்கள் ஆத்தாக்களின் திருவருளாலும் அம்மையப்பன்களின் இனிய துணையாலும் தங்களுக்குரிய நன்மைகள் விரைவில் விளையட்டும் என்று குருபீடம் தங்களை வாழ்த்துகிறது.

5. தங்கள் அஞ்சலில் முதல் பாராவில் "*இந்து மதத்தைப் பற்றியும், கடவுள் நிலையைப் பற்றியும் மிகவும் தவறான சிந்தனையுடன் எழுதியுள்ளீர்கள்*" - என்ற வாசகம் தங்களால் எழுதப் பட்டிருக்கிறது.

**விளக்கம்**:- திருவருட்செல்வ! ஈ.செ.கதிர்வேல் அவர்களே! உங்களுடைய வாழ்நாளில் நீங்கள் எத்தனைப் புத்தகங்களில் அல்லது எந்தப் புத்தகத்தில் (1) இந்து, (2) இந்துவேதம் (3) இந்துவேத மதமான இந்துமதம் (4) இந்துமத வேதங்கள் (5) இந்துமத வாழ்க்கை (6) இந்துமதச் சாத்திறங்கள் (7) இந்துமதச் சடங்குகள் (8) இந்துமதப் பழக்க வழக்கங்கள் (9) இந்துமத நம்பிக்கைகள் (10) இந்துமதக் கொள்கைகள் (11) இந்துமதக் குறிக்கோள்கள் (12) இந்துமதக் கடவுள்கள் (13) இந்துமத வரலாறுகள் (14) இந்துமதக் கோயில்கள் (15) இந்துமத அருளாளர்கள், (16) இந்துமத விளக்கங்கள்.... என்ற தலைப்புக்களில் செய்திகளையும், கருத்துக்களையும் படித்திருக்கிறீர்கள்? - நெஞ்சில் கை வைத்துப் பதில் சொல்லுங்கள். இத் தலைப்புக்களில் ஒரு புத்தகம் கூட நாட்டில் இல்லை! இல்லை! இல்லை! இல்லவே இல்லை! எனவே, நீங்கள் இந்துமதம் பற்றிய செய்திகளை ஏட்டறிவால் எப்படிப் பெற்றீர்கள்?! பெற்றிருக்கவே முடியாது.

(அ) ஆகத் தாங்கள் தங்களுக்குத் தெரியாத ஒன்றைத் தெரிந்ததாக எழுதி யிருக்கிறீர்கள். அதாவது தாங்கள் போகாத ஊருக்கு வழிகாட்டப் புறப்பட்டிருக்கிறீர்கள். உங்கள் மனச்சாட்சி தூய்மையோடும் வாய்மையோடும் பதில் சொல்லட்டும். 'இந்துமதம் வேறு! ஹிந்துமதம் வேறு!' என்ற அறிக்கையைப் படித்துப் பாருங்கள்.

(ஆ) பேரார்வமிக்க திருவருட் செல்வர் ஈ.செ. கதிர்வேல் அவர்களே! தங்கள் வாழ்நாளில் சந்தித்த அல்லது கேள்விப்பட்டிட்ட **இந்துமதத் தலைவர்களோ, ஆச்சாரியார்களோ, குருபீடங்களோ, மடாதிபதிகளோ,**

**சன்னிதானங்களோ, ஆதீனங்களோ, தம்பிரான்களோ, பண்டாரங்களோ, பண்டார சந்நதிகளோ, பண்டார சந்நிதிகளோ, புராண இதிகாசச் சொற்பொழிவாளர்களோ, இலக்கியப் பேச்சாளர்களோ, ஹிந்துமதம் சார்ந்த கழகங்கள், கட்சிகள், இயக்கங்கள், சங்கங்கள், சபைகள், திருக்கூட்டங்கள்.... முதலிய நிறுவனங்களோ** பொதுமேடைகளில் மேலே பட்டியலிட்டுக் காட்டியபடி 'இந்து' என்ற சொல்லையோ அல்லது, இது உட்பட இந்து என்ற சொல் முதலாக உள்ள சொற்றொடர்கள் (அ) பகுதியில் (1) முதல் (14) முடிய பட்டியலிடப் பட்டுள்ள சொற்களையோ, சொற்களுக்குரிய பொருள்களையோ பேசிடக் கேட்டிருக்கிறீர்களா?! பேசிடக் கேட்டிருக்கிறீர்களா?!?! பேசிடக் கேட்டிருக்கிறீர்களா?!?!?!

**கேட்டிருக்க முடியாது, முடியாது, முடியாது, முடியவே முடியாது.** எனவே, தாங்கள் சிந்தைத் தெளிவுடன் நெஞ்ச உறுதியுடன், மனச்சாட்சியின் தூய்மையையும், வாய்மையையும் காத்து பதில் சொல்ல முற்படுவீர்களேயானால்; **நீங்கள் இந்துமதம் பற்றிச் செவி அறிவாக அதாவது கேள்வி அறிவாகப் பெற்றிட்ட செய்திகள் ஏதேனும் உண்டா?! உண்டா?! உண்டா?!** எனவே, அநேகமாக எதுவும் இருக்க முடியாது, இருக்கவும் முடியாது. அதாவது **தாங்கள் அறியாத ஒன்றைப் பற்றி அறிவுரை வழங்கப் புறப்பட்டிருக்கிறீர்கள்** என்பதுதான் விளக்கம் - என்பதுதான் உண்மை.

*குறிப்பு:-* 'இந்து' என்பது வேறு; 'ஹிந்து' என்பது வேறு. இது பற்றிய அச்சிட்ட தெளிவான அறிக்கை இத்துடன் இணைக்கப் பட்டிருக்கிறது.

(இ) எனவே, தாங்கள் எந்த நிலையில் இருந்து கொண்டு, தங்களுடைய அஞ்சலை எழுதியிருக்கிறீர்கள் என்ற பேருண்மையினை **இப்பொழுதாவது இனிமேலாவது! நீள நினைத்து!? ஆழச் சிந்தித்துப் புரிந்து கொள்ள** முற்பட்டால் நல்லது, நல்லது, நல்லது.

(ஈ) **கடவுள் நிலை:** திருவருட் செல்வ! தங்களுக்கு கடவுள் நிலை பற்றிக் கூறியவர்கள் யார்? யார்? அல்லது என்னென்ன நூல்கள்? என்பதை மீண்டும் ஒருமுறை நினைத்துப் பட்டியலிட்டுப் பாருங்கள். அப்பொழுதுதான் கடவுள்நிலை பற்றிய உங்களுடைய கருத்துக்கள் முறையானவையா? நிறைவானவையா? முழுமையானவையா? என்பது புரியும், புரியும், புரியும்.

*குறிப்பு:* **அன்பு கூர்ந்து குருபீடத்தின் தாத்தா வடலூர் இராமலிங்க அடிகளாரின் கடவுள் பற்றிய கருத்தையே உங்களுடைய கருத்து என்று கூறிவிட வேண்டாம்.** ஏனென்றால், அவர் தோன்றி ஒரு நூற்றாண்டுக்கு மேலாகியும், அவர் வாழ்ந்த வாழ்க்கையையோ, அவர் செய்த அல்லது அவர் நோற்ற அல்லது அவர் ஏற்ற பயிற்சிகளையோ, முயற்சிகளையோ, அடைந்த சாதனைகளையோ, அவர் அருளிய திருவருட்பாவினையோ, அதன் மூலம் அவர் வழங்கிய போதனையையோ சரியாகப் புரிந்து கொண்டவர்கள் ஏறத்தாழ அவர் காலத்திலும் யாருமில்லை, அவருக்குப் பின்னும் யாருமில்லை, இல்லை, இல்லை, இல்லவே இல்லை! இதுதான் சத்தியம், சத்தியம், சத்தியம், உண்மை, உண்மை, உண்மை.

(உ) இப்பேருண்மை பற்றி சென்னைக் கடற்கரையிலோ அல்லது வடலூர்த் தைப்பூச விழாவிலோ அல்லது எந்த ஊரிலோ, எந்த இடத்திலோ எவருடன் வேண்டுமானாலும் மணிக்கணக்கில் வாதிடவும் தயார்! நாட்கணக்கில் வாதிடவும் தயார்!

(ஊ) அதாவது, நீங்கள் கடவுள்நிலை பற்றி எதையுமே தெரிய, அறிய, ஆராய, புரிய, தெளிய, உணர.... முடியவே முடியாத மனிதர்தான் என்பதை மனச்சாட்சியுடன் உணருங்கள் அல்லது ஒப்புக் கொள்ளுங்கள்.

(எ) இப்படியாக உங்கள் அஞ்சலின் முதல் பாராவிற்குத் தருகின்ற விளக்கம் நிறைவு பெறுகின்றது. அன்பு கூர்ந்து இவ்விளக்கத்தினால் மனம் புண்பட்டு விட வேண்டாம். உங்கள் மனதைப் புண்படுத்துவதற்காக இவ்விளக்கங்கள் வழங்கப் படவில்லை. ஏனென்றால், இன்று கி.பி. 1991 என்ற கணக்குடன், அண்ட பேரண்டமாளும் பதினெண் சித்தர்கள் வழங்கிய இந்துவேதமும், இந்துவேத மதமான இந்துமதமும், இவை சார்ந்த பதினான்குக்கும் மேலான அங்கங்களும் (மேலே (அ)இல் பட்டியலிடப் பட்டுள்ளன) இம்மண்ணுலகுக்கு வழங்கப் பட்டு 43,73,092 ஆண்டுகள் (நாற்பத்து மூன்று இலட்சத்து எழுபத்தி மூவாயிரத்து தொண்ணூற்று இரண்டு ஆண்டுகள்) ஆகின்றன.

இந்த முதுபெரும் இந்து வேதம் மிகத் தெளிவாக,

“பிறர் மனம் புண்படக் கருத்துக்கள் கூறிப் பிறரைப் புண்படுத்துவதென்பது இயலாது” என்றும்;

“அச்சுறுத்தியோ, இச்சகம் பேசியோ, வற்புறுத்தியோ வழங்கப்படும் கருத்துக்கள் நீடித்து நிலைத்து நிற்க இயலாது” என்றும்

மிகத் தெளிவாக அறிவுரை வழங்குகிறது. எனவேதான், உண்மைகளைக் கூறியே ஆக வேண்டும் என்ற இன்றியமையாமையால் இங்கு கூறப்பட்ட வாசகங்கள் எதுவும் தங்களைப் புண்படுத்தி விடக்கூடாது, அச்சுறுத்தி விடக் கூடாது என்ற பரிந்துரை அறிவிப்பு உங்களுக்கு வழங்கப்படுகிறது.

6. தாங்கள் தங்களுடைய இரண்டாவது பாராவில் *“சித்தர்கள் வரிசை பற்றியும் தவறான கருத்துக்களை எழுதியுள்ளீர்கள்”* - என்று குறிப்பிட்டுள்ளீர்கள்.

இதன்படிப் பார்த்தால் ஏதேனும் சில புத்தகங்களிலிருந்தோ, அல்லது சில பெரியவர்களிடமிருந்தோ சித்தர்கள் பற்றிய செய்திகளையும் கருத்துக்களையும் தெரிந்து வைத்திருக்கிறீர்கள் என்று கருதுகிறோம். ஆனால், அந்தப் புத்தகங்களை யெல்லாம் எழுதியவர்கள் யார்? அந்தப் புத்தகங்களை எழுதியவர்களுக்குச் சித்தர்கள் பற்றிய கருத்துக்களும் செய்திகளும் எப்படிக் கிடைத்தன என்ற ஆராய்ச்சிகளைச் செய்தால் சித்தர்களைப் பற்றிய உங்களுடைய புத்தக அறிவு எடையிடப்படும். அதேபோல், உங்களுக்குச் சித்தர்களைப் பற்றிக் கூறியவர்கள் யார் யார்? அவர்களுக்குச் சித்தர்களைப் பற்றிக் கூறியவர் யார் யார்? என்பன போன்ற ஆராய்ச்சிகள் நிகழ்த்தப் பட்டால் உங்களுடைய சித்தர்களைப் பற்றிய கேள்வியறிவு எடையிடப்படும். எனவே, விளையாட்டுக் குழந்தைகள் போல் உங்களுக்குத் தெரிந்ததை வைத்து அவசரப்பட்டு எதுவும் கூற வேண்டாம்.

*குறிப்பு*:- (அ) சித்தர்களில் 48 வகை உண்டு; சித்த கணங்களில் 48 வகை உண்டு; இவர்களை யெல்லாம் உகம் உகமாக (யுகம் யுகமாக) உருவாக்குபவர்களே பதினெண் சித்தர்கள். இவர்கள் காலங்கள் தோறும் தோன்றுவார்கள். இந்தப் பதினெண்சித்தர்களையும் இயக்குபவர்களே பதினெண்சித்தர் பீடாதிபதிகள். இம்மண்ணுலகின் நான்கு யுக முடிவிற்குள் பதினெண் சித்தர் பீடாதிபதிகள் நாற்பத்தெட்டுப் பேர் தோன்றுவார்கள். மற்ற விவரங்கள் சாதாரண மானுடர்களுக்குத் தேவையில்லை, பயனில்லை.

(ஆ) ‘சித்தர்’ என்ற சொல்லுக்கு முறையான நிறைவான முழுமையான பொருள் தெரிந்து கொள்ள மிகச் சிறந்த பக்குவம் தேவை.

7. தங்கள் அஞ்சலின் மூன்றுவது பாராவில், “*இந்து மதம் என்பதற்கு வரலாறுகள் கிடையாது*” என்று எழுதியிருக்கிறீர்கள்.

**விளக்கம்**: இப்படித் தாங்கள் எழுதியிருப்பது முன்னுக்குப் பின் முரணுக இருக்கிறது. அதாவது, வரலாறே இல்லாத இந்து மதத்தைப் பற்றித் தாங்கள் எங்கே தெரிந்து கொண்டீர்கள்?! அப்படித் **தா**ங்கள் இந்துமதத்தைத் தெரிந்து கொண்டதுதான் சரி என்றும்; **நா**ங்கள் இந்துமதத்தைப் பற்றிக் கூறியது தவறு என்றும் கண்மூடித் தனமாகக் கருத்துக் கூற வந்தது ஏன்? எப்படி? எதனுடைய அல்லது எவருடைய தூண்டுதலால் இப்படி இந்துமதத் தந்தையையே குறைகூற முற்பட்டீர்கள்? மனச்சாட்சியுடன் சிந்தியுங்கள், சிந்தியுங்கள், சிந்தியுங்கள்.

8. தங்களின் அஞ்சலில் நான்காவது பாராவில் “*மதம் பிடித்த மக்களே மதம் என்ற அமைப்பை ஏற்படுத்தி யுள்ளார்கள்*” - என்று எழுதி யிருக்கிறீர்கள்.

**விளக்கம்**: தாங்கள் இப்படிக் கடுமையான வறட்டுத் தனமான குற்றச் சாட்டை முரட்டுத் தனமாகக் கூறியிருப்பதால் உங்களேயும், இன்றுவரை உங்களுக்கு ஆசான்களாகவும், உற்ற நண்பர்களாகவும், தோழர்களாகவும், சுற்றமாகவும், தாங்கள் கல்வி கற்ற நிறுவனத்தார்களாகவும் இருப்பவர்களே யெல்லாம் ஒரு சேர விமரிசிக்க வேண்டி நேரிடுகிறது. வருந்துகிறோம். நீங்கள் யாரும் வருந்தக் கூடாது.

9. இந்துமதம், வேதமதம், சாத்தரம், சாத்திரம், சாத்திறம், தோத்தரம், தோத்திரம், தோத்திறம், சம்பிறதாயம், சடங்கு, திருநாள், திருவிழா, நான்மறை, நான்முறை, நானெறி, நான்வேதம், நான்சுருதி, நான் ஆரணம், நான்ஆகமம், நான்மீமாம்சை, நவநாதம், பதினெண் சித்தம், முப்பத்தாறு ஓதம், தொண்ணூற்றுறு போதம், கோயில், ஆலயம், திருப்பதி ... முதலிய கணக்கற்ற இந்துமதக் கலேச் சொற்களில் எவற்றுக்காவது முறையான, நிறைவான, முழுமையான பொருள் யாருக்காவது தெரியுமா?

‘*மதம், நான்கு வேதம், நான்கு வேதத்தைத் தோற்றுவித்த பெரியவர்கள்... முதலிய அனேத்துமே குற்றமுடையவை என்றும், தவறுன பாதைக்கு அழைத்துச் சென்றுள்ளது என்றும்...*’ என்று குற்றம் சாட்டும் தங்களுக்கும், தங்களேச் சார்ந்தவர்களுக்கும் குற்றமற்றவைகள் யாவை? என்று தெரியுமா?!

தவறில்லாதவைகள் யாவை என்று புரியுமா?! மனச்சாட்சியுடன் சிந்தியுங்கள், சிந்தியுங்கள், சிந்தியுங்கள்.

10. தங்கள் அஞ்சலின் 5, 6, 7 பாராக்களில் சித்தர்களைப் பற்றிக் கூறியுள்ள அனைத்துமே தவறு, விரிவஞ்சி இங்கு அதை விமரிசிக்க வில்லை. நீங்கள் பதினெண்சித்தர் மடத்திலிருந்து வெளி வந்துள்ள நூற்றுக்கும் மேற்பட்ட புத்தகங்களையும், ஆயிரக்கணக்கான அறிக்கைகளையும் படித்தால்தான் தெரியும். விரும்பினால் முயலுக. உங்களைப் போன்றோரை இதுபோல் எழுதியோ பேசியோ திருத்த முடியாது. நீங்களெல்லாம் பல ஆண்டுகள் குருகுல வாழ்க்கை வாழ்ந்தால்தான் மேற்படிச் செய்திகளைப் புரிந்து கொள்ள முடியும்.

11. தாங்கள் தங்கள் அஞ்சலின் எட்டாவது பாராவில் "*... இறுதியாக வந்த வள்ளல் பெருமான் ஒருவர்தான் முடிவான உண்மைகளை துணிவுடன் எடுத்துக் காட்டியுள்ளார். மனித சமுதாயத்திற்கு நல்வாழ்விற்கு முக்கிய தடைகளாக இருப்பது சாதி, மதம், சமயம், இனம், மார்க்கங்கள் என்பவை என்றும், சாதி, மதம், சமயம், இனம், நாடு, மார்க்கங்கள் யாவும் பொய்யானது; அவைகளை நம்ப வேண்டாம் என்று மிகவும் வலியுறுத்தி யுள்ளார்*" - என்று எழுதியதுடன் "*சாதியிலே மதங்களிலே* ... என்று தொடங்கும் திருஅருட்பாவையும் சான்றாகக் காட்டியுள்ளீர்கள்.

**விளக்கம்**: (அ) இப்படி நீங்கள் எழுதியிருப்பது உங்களுக்கு வடலூர் வள்ளல் பெருமானாரிடத்திலுள்ள பத்தியும், நம்பிக்கையும், பற்றும், பாசமும், அறிவு கடந்த நிலையை அடைந்து விட்டன. (அறிவிறந்த அல்லது வெறி நிறைந்த) இதை எதைச் சொல்லியும் திருத்த வியலாது. உங்கள் கண்மூடித்தனமான பத்தி வாழ்க! வளர்க!

(ஆ) ஆனால், வள்ளல் பெருமானாரின் திரு அருட்பா 'சாத்திரம்' என்று அழைக்கப் படுகிறது நாட்டு வழக்கில். அத்துடன், மார்க்கங்களை யெல்லாம் கண்டித்த அவரது முயற்சி மட்டும் 'சன்மார்க்கம்' என்று மீண்டும் 'மார்க்கம்' என்ற சொல்லாலேயே அழைக்கப் படுகிறது. இவற்றுக்கெல்லாம் மேலாக, வள்ளல் பெருமானாரின் பெயரிலுள்ள மன்றங்கள், சங்கங்கள், சபைகள், கூட்டங்கள், அற நிறுவனங்கள்.... முதலிய அனைத்திலும் சாதியின் அடிப்படையிலேயே தலைமைகள் இருக்கின்றன, செயல்பாடுகள் இருக்கின்றன.... இவை பற்றித் தங்களைப் போன்றோர் சிந்தித்தால் நல்லது. அதற்கு வள்ளல் பெருமானாரையும்,

அவரது திரு அருட்பாவினையும் முறையாக முழுமையாக நிறைவாகப் புரிந்த அருளாளரின் வழிகாட்டலும், வழித்துணையும் கிடைத்தற்கரியனவாக இருக்கின்றன. என் செய்வீர்கள் தங்களைப் போன்றோர்கள்?

12. தங்களின் அஞ்சலின் 9வது பாராவில் *"சாதியாலும், மதத்தாலும், சமயத்தாலும், சாத்திரத்தாலும், கோத்திரத்தாலும் மனிதனை மனிதன் பிரித்து வைத்து வேற்றுமை உணர்வுகளால்; உண்மை தெரியாது பல கருத்து வேறுபாட்டின் காரணமாக ஒருவரை ஒருவர் சண்டையிட்டு அழிந்து கொண்டு இருக்கிறார்கள். ஆதியிலே எவனோ? ஒருவன் செய்துவிட்ட அறியாமையின் கருத்தை மையமாகக் கொண்டு இன்று வரையில் கண்முன் தெரியாமல் அலைந்து வீணே போய்விட்டார்கள். இனிமேலும், அப்படித் தவறான பாதையில் போகாமல் எல்லார்க்கும் பொதுவான, நீதி தவறாத சுத்த சன்மார்க்கத்தில் சேர்ந்து ஞானமுள்ள கடவுளின் நேரடிப் பார்வையில், அருட்பெருஞ்சோதியை வந்து நமக்கெல்லாம் உண்மையை விளங்க வைக்க வருகின்றார், வாருங்கள் என்று ஞான சித்திபுரமான வடலூருக்கு அழைக்கின்றார்"* - என்றும், பத்தாவது பாராவில், *"இப்படி உண்மைகள் ஒருபுறம் இருக்க நீங்கள் இன்னும் அறியாமையில் இருப்பதை நினைக்கும் பொழுது ஆன்ம நேய உரிமையினால் வருந்துகிறோம், வேதனைப் படுகிறோம்"* - என்றும் நீங்கள் எழுதியிருக்கிறீர்கள்.

**விளக்கம்:**

(அ) தங்கள் அஞ்சலிலிருந்து ஒன்பதாவது பத்தாவது பாராவை அப்படியே எழுதியிருக்கிறோம். ஏனென்றால், தாங்கள் திருஅருட்பா கொடை வள்ளல், அருட்பெருஞ்சோதி ஆண்டவர் வள்ளல் பெருமானாரிடத்து கொண்டுள்ள பத்தியும், நம்பிக்கையும், பற்றும் முறையான போக்கின்றி காட்டாற்று வெள்ளத்தின் போக்கினையே பெற்று விட்டது என்பதைத்தான் காட்டுகின்றன, காட்டுகின்றன, காட்டுகின்றன. எனவே, தாங்கள் இந்த வெறி நிலையிலிருந்து, தங்கள் வாழ்நாளுக்குள் பயனுள்ள நெறி நிலைக்கு வருவதற்கு இறையருளால் தங்களுக்கு நல்ல வழியும், நல்ல வழிகாட்டலும், நல்ல வழித்துணையும் விரைவில் கிடைக்கட்டுமென்று ஞானாச்சாரியார் வாழ்த்துகிறார். குழந்தைப் போக்கில் உள்ள வறட்டுப் பிடிவாதத்தையும், முரட்டுப் போக்கினையும் விட்டுவிட்டு எதையும் நிதானமாகச் சிந்தித்து தக்காரின் துணைக் கொண்டு பொறுப்போடும்,

பொறுமையோடும் [சிந்தித்தால்] நற்பேறு பெற முடியும், பெறமுடியும், பெறமுடியும்.

(ஆ) தாங்கள் ஆதியிலே எவனோ ஒரு தனிமனிதன்தான் தவறுதலாகச் சாதி, மதம், சமயம், சாத்திரம், கோத்திரம் முதலியவைகளை உருவாக்கி விட்டதாகக் குற்றம் சாட்டியிருக்கிறீர்கள். இது பால் உகர் (பாலுகர் => பாலகர்) பள்ளிச் சிறுார் பேச்சை விடச் சிறுபிள்ளைத் தனமாக இருக்கிறது. தாங்கள் சமுதாய வரலாறு, குடும்ப வரலாறு, தனிமனித வரலாறு என்ற வரலாறுகளையும், மானுட அறிவியல் வளர்ச்சி வரலாறு, மனித அகப்பண்பாட்டு வளர்ச்சி வரலாறு, மனிதப் புறநாகரீக வளர்ச்சி வரலாறு, மதங்களைத் தோற்றுவித்த ஞானிகளின் வரலாறு முதலிய பல வரலாறுகளை அன்புகூர்ந்து படித்தும், படித்தவர்களிடம் கேட்டும் உங்களைத் தயாராக்கிக் கொள்ளுங்கள். அதன் பிறகு, இதுபோல் ஆன்மீக உலக விருப்பு வெறுப்புக்களை வெளியிட முற்படுங்கள்.

(இ). அதாவது, **ஒரு தனிமனிதனால்தான் இந்த 'சாதி, மதம், சமயம், சாத்திரம், கோத்திரம் முதலியவைகள் எல்லாம் உருவாக்கப் பட்டன' என்று கருதுவதும் கூறுவதும் மோசமான செயல், மோசடியான செயல், பிறரை ஏமாற்றுகின்ற செயல்.** உணர்க.

(ஈ). தாங்கள் *"வடலூர் அருட்பெருஞ்சோதி ஆண்டவர் வள்ளல் பெருமானார் அவர்கள் சுத்த சமரச சன்மார்க்கம் பற்றிக் கூறி அனைவரையும் ஞானசித்திபுரமான வடலூருக்கு அழைக்கின்றார்"* என்று பெருமிதத்தோடு கூறியிருக்கிறீர்கள். ஆனால், வடலூர் வள்ளல் பெருமானார் தம் வாழ்நாள் முழுதும் அனைவரையும் ஞானசித்திபுரமான வடலூருக்கு அழைத்து அழைத்துப் பார்த்து விட்டு; யாருமே அவர் எதிர்பார்த்தபடி வராததால் நம்பிக்கை நைந்து, நெஞ்சம் வெந்து, சிந்தை நொந்து, "கடைவிரித்தோம் கொள்வாரில்லை", "நிற்போர் நிற்க யாம் ஏகுகிறோம்" என்று வாய்விட்டுப் புலம்பிக் கூறிச் சென்றது ஏன்? ஏன்?! ஏன்?! ஏன்?!

**இப்படி அவர் காலத்திலேயே அவரால் நிகழ்த்த முடியாத நிகழ்ச்சிகள்; அவர் தோன்றி ஒரு நூற்றாண்டுக்கு மேலாகியும் ஏன் சுத்த சமரச சன்மார்க்க சங்கம் வெற்றி பெறவில்லை?! ஏன் திருவருட்பா முழக்கங்கள் எல்லோர் உள்ளங்களிலும், எல்லா இல்லங்களிலும் முழக்கப் படவில்லை!? என்று எவராவது சிந்தித்தார்களா?! சிந்தித்தார்களா?! சிந்தித்தார்களா?!**

**சிந்திக்கத் தெரியவில்லையா? அல்லது சிந்தித்துக் கண்டனவற்றை வெளியில் கூற இயலவில்லையா? அல்லது செயலாக்க முடியவில்லையா? ... இது பற்றி அன்பு கூர்ந்து சிந்தியுங்கள்! சிந்தியுங்கள்! சிந்தியுங்கள்! பிறரைச் சிந்திக்க வையுங்கள்! சிந்திக்க வையுங்கள்! சிந்திக்க வையுங்கள்! இப்படி நீங்கள் சிந்திக்கவும், பிறரைச் சிந்திக்க வைக்கவும்** பொதுக் கூட்டங்களை நிகழ்த்துங்கள், நிகழ்த்துங்கள், நிகழ்த்துங்கள். அக் கூட்டங்களில் அருளுரையும், அறிவுரையும், அருளார்ந்த அறிவுரையும், அறிவார்ந்த அருளுரையும் வழங்கிட பதினெண்சித்தர் மடத்தில் தயாராகியுள்ள ஆயிரமாயிரம் சன்னிதானங்கள் தயாராக இருக்கிறார்கள். **நீங்களும் உங்களைப் போன்றவர்களும், வடலூர் வள்ளல் பெருமானார் பெயரில் இயங்குகின்ற நிறுவன நிர்வாகங்களும், அதன் தலைவர்களும் தயாராகுங்கள்! தயாராகுங்கள்! தயாராகுங்கள்! நாம் அனைவரும் இந்த இருபதாம் நூற்றாண்டில் அனைத்தையும் பற்றி மறு சிந்தனை செய்வோம்! மறு சிந்தனை செய்வோம்! மறு சிந்தனை செய்வோம்!** எரிமலை நெருப்பே! உறக்கமென்ன இனி உனக்கு! நாம், சந்திப்பதும் சிந்திப்பதும் எப்போது? எப்போது? எப்போது?

(உ) **‘சாதி, மதங்கள், கோத்திரங்கள், சாத்திரங்கள், மார்க்கங்கள் ... முதலிய அனைத்தையும் ஒழித்தால்தான் உலக ஆன்ம நேய ஒருமைப்பாடு உருவாகும்’** என்ற கொள்கையும் குறிக்கோளும்தான் வடலூர் அருட்பெருஞ்சோதி ஆண்டவர் வள்ளல் பெருமானின் கொள்கையும் குறிக்கோளும் ஆகும். தாங்கள் சான்றாக எடுத்துக் காட்டியுள்ள பாடலிலும் அக்கருத்துத்தான் இருக்கிறது. இம் மாபெரும் கொள்கையும், குறிக்கோளும் நிறைவேற வேண்டுமென்றால் வள்ளல் பெருமான் பேரிலுள்ள எல்லாவகையான நிறுவனங்களும், நிர்வாகங்களும், இவற்றைச் சேர்ந்தவர்களும்; குறைந்தது தமிழகத்தில் ஊர்தோறும், வட்டம் தோறும், மாவட்டம் தோறும் அனைத்து மதத்தவர்களின் கருத்துப் பரிமாற்ற மாநாடுகள் நடக்கும்படிச் செய்ய வேண்டும். ஆண்டு முழுவதும் இவற்றின் முடிவாக மூன்று மாதங்களுக்கு ஒருமுறை அல்லது ஆறு மாதங்களுக்கு ஒருமுறை வடலூரிலோ அல்லது மேட்டுக் குப்பத்திலோ மதத் தலைவர்களையும், மதம் தொடர்பான கட்சித் தலைவர்களையும், மத அறிஞர்களையும், மதப் புலவர்களையும் வரவழைத்து மிகப் பெரிய மாநாடுகள் நடத்தப்பட வேண்டும், நடத்தப்பட வேண்டும்,

நடத்தப் பட வேண்டும். அங்கு வெளியிடப்படும் கருத்துக்கள் மாநாட்டு மலர்களாக தொகுதி தொகுதிகளாக வெளியிடப்படல் வேண்டும். அவை தென்னிந்திய அளவிலும், உலக அளவிலும் பரவ வேண்டும். அப்பொழுதுதான் ஆண்டுக்கொருமுறை தைப்பூசத் திருநாளிலே கூடுகின்ற மக்கள் சாதி, மதம், மார்க்கம், கோத்திரம், சாத்திரம் முதலியவைகளைப் பற்றிய உண்மைகளைத் தெரிந்து ஆராய்ந்து ஆராய்ந்து, அறிந்து அறிந்து, புரிந்து புரிந்து, தெளிந்து தெளிந்து, உணர்ந்து உணர்ந்து நம்பிச் செயல்பட்டிட முடியும். அதுதான், உண்மையிலேயே அருட்பெருஞ்சோதி ஆண்டவருக்காக அவருடைய பத்தர்கள், நிறுவன நிர்வாகங்களும் தொண்டு செய்ததாகும். மேலும், **அப்படிச் செயல்பட்டிட்டால்தான், வடலூர் வள்ளல் பெருமானின் கொள்கையையும், குறிக்கோளேயும்** எல்லா மதத்தவர்களும் தெரிய, ஆராய, அறிய, புரிய, தெளிய, உணரக் கூடிய வாய்ப்புகள் உருவாகும், உருவாகும், உருவாகும். இதை விட்டுவிட்டு **மதவெறி கொண்ட மூர்க்கர்களைப் போல்** அருட்பெருஞ்சோதி ஆண்டவரின் பத்தர்களும் **மாற்றுரைக் கண்மூடித்தனமாக வெறிகொண்டு விமரிசிக்கும் பணியில்** ஈடுபட்டிட நேரிட்டிடுவதால்தான் அருட்பெருஞ்சோதி ஆண்டவரான இராமலிங்க அடிகளாரும், அவருடைய அருட்கொடையான திருவருட்பாவும் குடத்திலிட்ட விளக்கு போல் தமிழகத்துக்குள் விரல்விட்டு எண்ணக் கூடிய அளவு ஒரு குறிப்பிட்ட தொகை இல்லங்களிலும், உள்ளங்களிலும் மட்டுமே வாழ நேரிட்டுள்ளன.

குறிப்பு:- தங்களைப் போன்றவர்களும் கூட, (அதாவது தாங்கள் இளைஞராகவே அல்லது இளமையைச் சற்றுக் கடந்தவராகவோ இருக்கலாம்) எதையும் பிறரோடு கலந்து பேசவோ அல்லது சிந்தனை செய்யவோ அல்லது மறு பரிசீலனை செய்யவோ அல்லது உலகியலாகவே மற்றவற்றோடு **ஒப்பிட்டு நோக்கி ஆய்வுகளை நிகழ்த்த**வோ தயாராக இல்லாமல் இருப்பது வருந்தத் தக்கதே! வருந்தத் தக்கதே! வருந்தத் தக்கதே! திருந்தத் தக்கதே! திருந்தத் தக்கதே! திருந்தத் தக்கதே!

(ஊ) வள்ளல் பெருமானுருடைய திருவருட்பா நெறியைப் பின்பற்றுவதாகக் கூறிக் கொண்டு - “வள்ளல் பெருமானூர்தான் வழிபடுதற்குரிய தகுதியை உடையவர்”, “வள்ளல் பெருமானுருடைய திருவருட்பா ஒன்றுதான் எல்லோரும் பின்பற்றுவதற்குரிய வேதம்”,

“வள்ளல் பெருமானார் கூறிய சுத்த சமரச சன்மார்க்கம்தான் சிறந்த மதம் அல்லது சிறந்த பத்தி நெறி”, “வடலூர்ப் பெருவெளிதான் உலக மக்கள் அனைவரும் வந்து வழிபட்டு உய்வு பெறுவதற்குரிய ஒரே இடம்”, ... என்பன போன்ற உலக மத வெறியர்களின் அதே போக்கில் வறட்டுத்தனமாகவும், முரட்டுத்தனமாகவும் கூறிக் கொண்டிருப்பதால் என்ன பயன் விளையும்? என்ன பயன் விளையும்? என்ன பயன் விளையும்? இனியாவது சிந்தியுங்கள்! இனியாவது சிந்தியுங்கள்! இனியாவது சிந்தியுங்கள்!

13. அருமை நண்பா! தோழா! அருட்பெருஞ்சோதி ஆண்டவர் வள்ளல் பெருமானாரின் பத்தா! வீரனே! ... உன் மூலமாவது விரல் விட்டு எண்ணக்கூடிய அளவில் மட்டுமே வள்ளல் பெருமானாரின் பெயரில் நிறுவன நிர்வாகங்களும், இந்த நிறுவன நிர்வாகங்கள் நிகழ்த்துகின்ற நிகழ்ச்சிகளும் இருக்கின்ற நிலையில் மாற்றம் ஏற்படட்டும், மாற்றம் ஏற்படட்டும், மாற்றம் ஏற்படட்டும். அதற்காக, **எங்களுடைய பொது மேடைகளுக்கு நீங்கள் வருகிறீர்களா? அல்லது உங்கள் பொது மேடைகளுக்கு நாங்கள் வரவா? அல்லது நாம் இருவரும் கலந்து பொது மேடைகளை உருவாக்கலாமா? நீங்களும் உங்களைச் சார்ந்தவர்களும் சிந்தியுங்கள், சிந்தியுங்கள், சிந்தியுங்கள்.**

14. தாங்கள் தங்கள் அஞ்சலின் 10வது பாராவில், - *“வள்ளல் பெருமான் அவர்கள் உலக இரகசியங்கள் யாவையும் வெட்ட வெளிச்சமாக அனைவரும் தெரிந்து கொள்ள வேண்டுமென்ற பேராசையினால் தெள்ளத் தெளிவாக ‘திருவருட்பா’ என்ற நூலின் வாயிலாக எழுதி வைத்துள்ளார். நீங்கள் அவசியம் வாங்கிப் படிக்க வேண்டும்”* - என்று எழுதியிருக்கிறீர்கள்.

**விளக்கம்**:-

(அ) இந்த வாசகங்களைக் கொண்டுதான் நீங்கள் வயதில் இளையவராகவும், அநுபவ அறிவில் ஆற்றங்கரை மணலில் கூழாங்கற்களைப் பொறுக்கும் சிறு பிள்ளையாகவும் இருக்க வேண்டுமென்று கருத நேரிட்டது எமது குருபீடத்தால்.

(ஆ) பேரார்வமிக்க வீர இளைஞனே! எமது குருபீடத்தின் அருட்பட்டங்களில் ஞானவேந்தர், இந்துமதத் தந்தை, இந்துவேத பீடம், இந்துமதத்தின் தலைமை ஆச்சாரிய மடமான பதினெண்சித்தர் மடத்தின்

மடாதிபதி, இந்துமதத்தின் தலைமைக் குருபீடமான பதினெண்சித்தர் பீடம், குவலய குருபீடம், நிறையக்ஞர், குருமகாசன்னிதானம், ஞாலகுரு, சித்தர் அரசயோகிக் கருவூரார் என்ற அடைமொழிகளை யெல்லாம், அதாவது அருட்பட்டங்களை யெல்லாம் படித்த பிறகும், வடலூர் வள்ளல் பெருமானாரையோ, அவருடைய திருவருட்பாவையோ தெரியாதவராக இருப்போம் என்று எப்படி முடிவு கட்டினீர்கள்? இது, எந்த அளவு **குழந்தைத்தனமான, விளையாட்டுப் பிள்ளைத்தனமான, கள்ளங்கபடமில்லாத சிறு பிள்ளைத்தனமான நோக்காகவும், போக்காகவும் இருக்கிறது என்பதை இனியாவது சிந்தியுங்கள்.**

(இ) வீர இளைஞனே! திருஅருட்பிரகாச ஆண்டவர் மீது அளப்பரிய பற்றும், பாசமும், பத்தியும் உடைய பத்தி நெறிச்செல்வ!..... எமது திருமடத்து அறிக்கைகளிலும், அறிவிக்கைகளிலும், சுவரொட்டிகளிலும் இந்துவேத மாநாட்டை மிகப் பெரிய இடைவெளிக்குப் பிறகு தனியொருவராக இருந்து துவக்கி யிருக்கிறார் குருதேவர் என்ற பேருண்மை விளக்கப் பட்டிருக்கிறது. அதன் மூலமாவது, இந்துவேத மாநாட்டை நடத்தக்கூடிய ஒரு மடாதிபதி, பீடாதிபதி, இந்துமதத்திற்கே தலைமை ஆச்சாரியாரான ஞானாச்சாரியார், அருளுலகத் தலைமை தாங்கும் தமிழன்; சென்ற நூற்றாண்டின் மிகப்பெரிய, அரிய, சீரிய அருளாளராகிய வடலூர் திருஅருட்பெருஞ்சோதி ஆண்டவர், திருவருட்பா வழங்கிய அருட்கொடை வள்ளல், இராமலிங்க அடிகளாரையும் அவரது திருவருட்பாவினையும் தங்களைப் போன்றோர் சொல்லித்தான் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற நிலையில்தானா இருப்பார்? இருப்பார்? இருப்பார்? ...?! மலரினும் மெல்லிய குழந்தை மனம் படைத்த திருவருட்செல்வ! இப்படி எமது குருபீடம் வியப்பும் வினாவும் வழங்கி யிருப்பதற்காக வருந்த வேண்டாம். உன்னைப் புண்படுத்த வேண்டாம் என்று எவ்வளவோ முயற்சித்தும் கூட எம் குருபீடத்தால் முடியவில்லை. உன்னுடைய வரிகளுக்குப் பதில் கூற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருப்பதால்தான் இப்படி விமரிசித்துள்ளார் குருபீடம். மேலும், எமது குருபீடம் இந்த அஞ்சல் கிடைத்தவுடன் உன்னுடைய நோக்கிலும், போக்கிலும் மிகமிகப் பெரிய பெரிய பயன்மிக்க மாற்றங்கள் ஏற்பட வேண்டும் என்று எதிர்பார்த்துத்தான்; பொறுப்போடும் பொறுமையோடும் ஓர் தனிப் புத்தகமாக அச்சிடக் கூடிய அளவிற்கு இவ்வளவு பெரிய

விரிவான அஞ்சல் பல நாட்களாக அவ்வப்போது தமக்குக் கிடைக்கின்ற ஓய்வுகளைப் பயன்படுத்தி இப் பதில் உருவாகும் படி திருவருள் புரிந்துள்ளார். எனவே, அக்கறையும், ஆர்வமும் மிக்க அருளுலக நாட்டமுடைய வீர இளைஞனே! உன்னால் முடிந்த வரை இந்த அஞ்சலுக்கு சில நகல்கள் எழுதப்பட்டு நாடெங்கும் அனுப்பப் படட்டும். அல்லது நீயே பொறுப்போடு இந்த அஞ்சலை நீ அறிந்த அல்லது உனக்குத் தெரிந்த வள்ளல் பெருமானாரின் பத்தர்களிடத்தும் நிறுவன நிர்வாகத்தார்களிடத்தும் பதட்டமின்றிப் படித்துக் காட்டு, பதட்டமின்றிப் படித்துக் காட்டு, பதட்டமின்றிப் படித்துக் காட்டு. அதன்மூலம் உனக்கும் உன் போன்ற பத்தர்களுக்கும் நமது தமிழ்மொழிக்கும், தமிழினத்துக்கும், இந்து மதத்துக்கும் அரிய பல பயன்கள் விளைந்திடும், விளைந்திடும், விளைந்திடும்.

15. தங்கள் அஞ்சலின் மூன்றாவது பக்கத்தில் 12, 13, 14, 15 என்ற நான்கு பாராக்களில் இந்தியாவில் இருக்கக் கூடிய அனைத்து மதக் கலவரங்களையும், இலங்கையிலுள்ள இனக் கலவரங்களையும் குறிப்பிட்டு இவை அனைத்திற்கும் மதவெறிதான் காரணம் என்று கூறி இம் மத வெறிகளைப் போக்கும் ஒரே வழி திருஅருட்பாதான் என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள்.

விளக்கம்:- **இது தங்களுக்கு சுத்த சன்மார்க்கத்தின் மீதுள்ள அளப்பரிய வெறியை, வெறியை, வெறியை, வெறியை, வெறியைத்தான் காட்டுகிறது. இது சரியா? இது சரியா? இது சரியா? இது சரியா? இது சரியா? இது சரியா?** இனியாவது சிந்தியுங்கள், சிந்தியுங்கள், சிந்தியுங்கள், சிந்தியுங்கள், சிந்தியுங்கள்.

16. தங்களது மூன்றாவது பக்கத்தின் இறுதியில், *"... தாயத்து, சக்கரங்கள், மந்திர தந்திரங்கள், முடிகயிறு, உருத்திராட்ச மாலை போன்ற போலிச் செய்கைகளினால் மனித சமுதாயத்தை நல்வழிக்குக் கொண்டு வர இயலாது"* - என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள்.

**விளக்கம்**:- வீர இளைஞனே! சுத்த சமரச சன்மார்க்க நெறி பரப்புகின்ற தாங்கள் சன்மார்க்க மதம் எனும் வெறிக்கு உள்ளாகி விட்ட காரணத்தினால்தான்! இந்துமதத்தின் சின்னங்களான உருத்திராக்கம், தாயத்து, முடிகயிறு... முதலியவைகளை இப்படிக் கண்மூடித்தனமாகத் தாக்கி விமரிசித்திருக்கிறீர்கள்.

(அ) உருத்திராச்சம் முதலிய பொருட்களைப் போலி என்று கூறியிருக்கிறீர்கள். அப்படியானால் தாங்கள் வழிபடும் வள்ளல் பெருமானார் கழுத்திலிருக்கும் உருத்திராக்கம் போலியா?

(ஆ) தாங்கள் வழிபடும் வள்ளல் பெருமானார் தமது அருட்கரத்தாலேயே உருத்திராக்கங்களை வழங்கியிருக்கின்றார். அப்படி அவர் உருத்திராக்கங்களை வழங்கியது போலியான செயலா?

(இ) தாங்கள் வழிபடும் வள்ளல் பெருமானார் கருணீக்க சைவ வேளாளர் குலத்தைச் சேர்ந்தவர். இக் குலத்தவர்கள் இன்றைக்கும் கொட்டை கட்டி வெள்ளாளர் என்றுதான் அழைக்கப் படுகிறார்கள். அதாவது, உருத்திராக்கக் கொட்டை கட்டிய வெள்ளாளர் என்பதே பொருளாகும். உங்கள் கருத்துப்படி வள்ளல் பெருமானாரின் குலத்தவர்கள் அனைவரும் போலிதானா?

(ஈ) வள்ளல் பெருமானார் தம்மைப் பற்றிக் குறிப்பிடும்போது,

> *"வாழையடி வாழையென வந்த திருக்கூட்ட மரபினில்*
> *வந்த ஒருவனே யான்...."*

என்று குறிப்பிடுகின்றார். இதன்படிப் பார்த்தால் 63 நாயன்மார்களும், மற்ற சிவனடியார்களும் வள்ளல் பெருமானாரின் குருவாகின்றார்கள். இப்படிக் குருவாகின்ற அனைவருமே உருத்திராக்கங்களைத் தலையிலும், கழுத்திலும், மார்பிலும், இடுப்பிலும், கைகளிலும் அணிந்தவர்கள்தான், அணிந்தவர்கள்தான், அணிந்தவர்கள்தான். அதனால், உங்களின் கருத்துப் படி உருத்திராக்கம் அணிந்தவர்கள் எல்லாம் போலிகள்தானே! அதாவது நீங்கள் போற்றும் வள்ளல் பெருமானாரும், அவர் போற்றிய மாணிக்க வாசகரும், திருநாவுக்கரசரும், திருஞான சம்பந்தரும், சுந்தர மூர்த்தி நாயனாரும்... போலிகள்தானா?! போலிகள்தானா?! போலிகள்தானா?! அன்பு கூர்ந்து நிதானத்தோடும், பொறுப்போடும், பொறுமையோடும் இருந்து சிந்தியுங்கள், சிந்தியுங்கள், சிந்தியுங்கள்.

(உ) சிறுபிள்ளைத் தனமாக கண்ணாடி வீட்டுக்குள்ளிருந்து கற்களை எறிந்து விளையாடுவது போல்; வடலூர் வள்ளல் பெருமானாரின் சுத்த சமரச சன்மார்க்கச்சங்கம் என்னும் கண்ணாடி வீட்டுக்குள்ளிருந்து சொற்களை அள்ளி வீசிவிட்டீர்கள். அதன் விளைவு எப்படி யெப்படி யெல்லாம், யார் யாரையெல்லாம் எந்தெந்த அளவுக்குப் பாதிக்கிறது, பாதிக்கிறது, பாதிக்கிறது என்பதைப் புரிந்து கொள்ளுங்கள், புரிந்து கொள்ளுங்கள்,

புரிந்து கொள்ளுங்கள். இனிமேலாவது சொற்களை சிறுபிள்ளைத் தனமாக அள்ளி வீச வேண்டாம்.

(ஊ) சுத்த சமரச சன்மார்க்கத்திடத்து அளப்பரிய வெறிகொண்ட வீர இளைஞனே! இந்துமதம் என்கின்ற மிகப் பெரிய தோட்டத்தில் பழுத்த ஞானக்கனியே இராமலிங்க அடிகளார். அந்தக் கனி எந்த மரத்தில் பூவாகிப் பிஞ்சாகிக் காயாகிப் பின் கனியாயிற்று என்பதைச் சிறுபிள்ளைத் தனமாய் மறந்து விட்டாய் நீ! அதாவது சிவநெறியெனும் தோட்டத்தில் பழுத்த அருட்கனிதான் வள்ளல் பெருமானுர். இந்தச் சிவநெறியின் தலைவனுன சிவன் உச்சி முதல் உடம்பெல்லாம் உருத்திராக்கங்களை அணிந்தவர்தான். அவர் அப்படி உருத்திராக்கங்களை அணிந்திருப்பதால் உங்கள் கருத்துப்படி அவரும்கூட போலிதான் இல்லையா?! இல்லையா?! இல்லையா?! அப்படி அவரையே போலி என்று கூறினுல், அவரைப் பத்தி செய்து, சத்தி சித்தி முத்திகளைப் பெற்ற அருட்பெருஞ்சோதி ஆண்டவர் இராமலிங்க அடிகளார் என்னுவது? எனவே, **இனியாவது சிந்தியுங்கள் பொறுப்போடு**.

(எ) இந்துமதத்தின் ஒரு பிரிவான சுத்த சமரச சன்மார்க்க நெறியைப் பின்பற்றுகின்ற பத்தி நிறைந்த வீர இளைஞனே! உருத்திராக்கம் என்பது அதை அணிந்தவர்களை உருத்திரராகவே ஆக்கும். அதாவது கடவுளாகவே மாற்றும். இப்படிப் பட்ட ஒரு நெறி, நெறிக்குரிய சாதனம் இந்த உலகிலேயே இந்துமதம் ஒன்றில்தான் உள்ளது. அதாவது, மனிதரைக் கடவுளாக்கும் நெறியும், அதற்குரிய சாதனமான உருத்திராக்கமும், அதற்குரிய வழியான ஐந்தீ வேட்டல் பூசைவழியும், முத்தீ ஓம்பல் பூசைவழியும், இப் பூசைவழிகளைப் பயன்படுத்திக் கொள்ள வழிகாட்டிகளாகவும், வழித்துணைவர்களாகவும் இருக்கின்ற குருபீடங்களும், மடங்களும், ஆச்சாரியார்களும் இந்துமதத்தில்தான் இருக்கின்றுர்கள். இந்துமதத்தில்தான் இருக்கின்றுர்கள், இந்துமதத்தில்தான் இருக்கின்றுர்கள். இவர்கள் அனைவரும் உருத்திராக்கங்கள் அணிந்தவர்களே! இதை இனியாவது புரிந்து கொள்க! புரிந்து கொள்க! புரிந்து கொள்க!

17. வீர இளைஞனே! **உருத்திராக்கம், தாயத்து, முடிகயிறு, சக்கரங்கள், மந்திர தந்திரங்கள் முதலியனவற்றைப் பழிப்பதென்பது அல்லது இழித்தழிப்பது என்பது நீ போற்றும் வள்ளல் பெருமானுர் பிறந்த இந்துமதத்தையும்; அவருக்கு அருளுலகில் தாயாகவும், தந்தையாகவும்**

**இருந்த கடவுள்களேயே பழிப்பதாகும். இழிப்பதாகும்.** இன்னும் சொல்லப் போனுல் நீ போற்றும் திருஅருட்பாவே மந்திரம்.

ஒருவேளே உனக்கு மந்திரம், தந்திரம் என்ற சொல்லுக்குப் பொருள் தெரியாதோ என்னவோ! தெரியவில்லே. ஏனென்ருல், தனது மனதின் தரத்தை உயர்த்திக் கொள்ள விரும்புபவன் நாடுவதுதான் மந்தரம். இதேபோல் தனது மனத்தை திரமாக்கிக் கொள்ள நாடுவதுதான் மந்திரம். அதாவது 'திரம்' என்ருல் வலிமை என்று பொருள். இதேபோல் மனதின் திறமையை வளர்த்துக் கொள்ள விரும்புபவர்கள் நாடுவதுதான் மந்திறம். அதாவது 'திறம்' என்ருல் திறமை என்று பொருள். இதேபோல், தன்னுடைய செயலின் திரத்தை, வலிமையை வளர்த்துக் கொள்ள விரும்பும் மனிதன் நாடுவதுதான் தந்திரம். தன்னுடைய செயலின் திறத்தை திறமையை வளர்த்துக் கொள்ள விரும்புபவன் நாடுவதுதான் தந்திறம். இப்படித் தமிழிலே உள்ள அருளுலகச் சொற்களுக்கு ஏராளமான பொருள் உண்டு. இவற்றை யெல்லாம் எண்ணிப் பாராமல் சிறுபிள்ளேத் தனமாக *மந்திர தந்திரம் என்பது போலிச் செய்கை* என்று கூறிவிட்டாய்.

**சிறப்பு விளக்கம்**:-

திருவருட் செல்வ! உன்னிடம் பத்தி வெறி இருக்கின்ற அளவுக்குப் பொறுப்பும், பொறுமையும் இல்லே. நீ போற்றுகின்ற வள்ளல் பெருமாஞரின் **திருவருட்பாவைப் படிக்குமாறு எமது குருபீடத்திற்கு அறிவுரை கூறியிருக்கிருய். முதலில் நீ அதை நன்ருகச் செய்திருக்கிருயா? உனக்கு நன்ருகத் திருவருட்பா தெரியுமா? என்று திருப்பிக் கேட்கும் நிலேயை உருவாக்கி விட்டாய்**. ஏனென்ருல், நீ போற்றும் வள்ளல் பெருமாஞரே தமது திருவருட்பாவில்:-

"தன்னே யறிந்து கொள்ள நீயொரு
தந்திரம் சொல்லாயோ வெண்ணிலாவே..."

என்று பாடுகிருர். இப்படி அவரே தந்திரத்தைக் கேட்கிருர் என்ருல் இந்தத் தந்திரம் என்பது போலியா? அல்லது இந்தத் தந்திரத்தைக் கேட்கும் வள்ளல் பெருமாஞர் போலியா? சிந்தித்துப் பார். **இனியாவது சொற்களே அவசரப்பட்டு உதிர்த்து விடாதே, கொட்டி விடாதே!**

18. அருளுலகின் வீர இளேஞனே! உன்னுடைய பத்திநெறி வெறிநெறியாக இருப்பதால்தான் உன்னேயும் மறந்து பிதற்றி விட்டாய்;

பிழைகள் செய்து விட்டாய், பிழைகள் செய்து விட்டாய். நீ இளைஞனென்பதால் உன் தவறுகளைப் பெரிது படுத்த வில்லை எமது குருபீடம். ஆனால், உன்னுடைய பிழைகளை யெல்லாம் முறையாகச் சுட்டிக்காட்டி அவற்றை அகற்றுவதற்காக சரியான பதில்களை நிறைவாகவும் முழுமையாகவும் தர முற்பட்டிருக்கிறது எமது குருபீடம். எனவே, எமது குருபீடத்தின் ஒரு சில வாசகங்களும், கருத்துக்களும் உன்னுடைய அருளுலகக் கருத்து உடம்புக்கு அறுவை மருத்துவத்தைச் செய்கின்றன. அதைத் தவிர வேறு வழியில்லை. அறுவை மருத்துவத்தால் வலி இருக்கும், வேதனை இருக்கும், குருதி கொட்டும், புண் ஆறுவதற்கு நாளாகும். ஆனால், முழுமையான நலம் விளையும், நலம் விளையும், நலம் விளையும். **உன்னுடைய கண்மூடித்தனமான வெறி நிறைந்த வாசகங்களுக்கு எவ்வளவுதான் முயன்று முயன்று மென்மையான வாசகங்களால் பதில் எழுத முயற்சித்தாலும் உன்னுடைய மனதைப் புண்படுத்தும் வாசகங்களாகச் சில வாசகங்கள் அமைந்து விடுகின்றன. வேறு வழியில்லை, வேறு வழியில்லை, வேறு வழியில்லை. எமது குருபீடத்தின் மீது வருத்தப் படவேண்டாம்! வருத்தப்பட வேண்டாம்! வருத்தப்பட வேண்டாம்!**

19. உருத்திராக்கம் அணிந்து ஒருவரைக் கடவுளாகவே மாற்றுகின்ற திருவருள் நெறியைக் கண்டுபிடித்தவர்கள் பதினெண்சித்தர்கள். இந்தப் பதினெண்சித்தர்களின் தலைவர்களாகத் தோன்றும் பதினெண்சித்தர் பீடாதிபதிகள்தான் இந்துமதத்தின் தந்தையாக, தலைமை ஆச்சாரியாரான ஞானச்சாரியாராக, தத்துவ நாயகமாக, வேத நாயகமாக, வேதபீடமாக, அருளுலக மூலவராக, காவலராக, வாரிசாகக் காலங்கள் தோறும் தோன்றிக் கொண்டிருக்கிறார்கள். எனவே, இந்தப் பதினெண்சித்தர் பீடாதிபதிகள் உருவாக்கி வளர்த்து வரும் அருளுலகக் கனிமலர்ச் சோலைகளில் பூத்த மலர்களாகவும், காய்த்துக் கனிந்த கனிகளாகவும் தோன்றுகின்ற அருளாளர்களில் ஒருவர்தான் வடலூர் வள்ளல் பெருமானார் ஆவார் என்பதை இனியாவது புரிந்து கொள்ளுங்கள், புரிந்து கொள்ளுங்கள், புரிந்து கொள்ளுங்கள். இது புரியுமானால், **பதினெண் சித்தர்களின் இந்துமதத்தையோ, இந்துமதத்தின் பூசை நெறிமுறைகளையோ, விதிகளையோ, பூசைகளுக்குரிய வகைவகையான பலி பொருட்களையோ, வழங்கப் படுகின்ற அருளூறு பூசனைப் பொருள்களான உருத்திராக்கம்,**

**சக்கரம், தாயத்து, முடிகயிறு, திருநீறு, குங்குமம் முதலியவைகளை**யோ இழித்தும், பழித்தும், எதிர்த்தும், மறுத்தும், வெறுத்தும், புறக்கணித்தும், ஒதுக்கியும், விலக்கியும் பேசுகின்ற அல்லது செயல்படுகின்ற தங்களைப் போன்றோர் அனைவரும் திருந்துவார்கள், திருந்துவார்கள், திருந்துவார்கள் அல்லது திருத்தப் படுவார்கள், திருத்தப் படுவார்கள், திருத்தப் படுவார்கள்.

20. திருநீறு, குங்குமம் போன்றவை பூசையின் பயனை எல்லோரும் பெறுவதற்காக வழங்கப் படுபவை ஆகும். 'முடிகயிறு' என்பது எதிர்பாராமல் ஏற்பட்டுவிட்ட பாதிப்புக்களுக்கு இறையருளைப் பயன்படுத்தி உடனடியாகத் தடை விதித்து முடிவு கட்டப் பயன்படுத்தப் படுகின்ற ஒன்றாகும். 'தாயத்து' என்பது ஒருவருக்கு தாய் வயிற்றில் கருவாக இருந்த காலத்திலிருந்து தொடர்ந்து வரக்கூடிய ஊழ்வினைப் பாதிப்புக்களுக்கும் கூட 'எல்லை விதித்து' (எல்லை = அத்து) முடிவு கட்டுகின்ற ஒன்றாகும். அதாவது, தாய்வழி வரும் பாதிப்புக்களுக்கு எல்லை விதித்துத் தடை செய்யும் ஆற்றலுடையதுதான் தாயத்து என்பது. எனவே, தாயத்து என்ற சொல்லுக்குரிய பொருளைப் போலியானது என்று இனியும் கருத வேண்டாம்.

**சிறப்பு விளக்கம்**:-

(அ) நாட்டு வழக்கில் தயாரிக்கப் படுகின்ற பொருள்களில் தயாரிப்பவர்களின் தரத்துக்கும், திரத்துக்கும் ஏற்பவே தயாரிக்கப் படுகின்ற பொருள்களின் தரமும் ஆற்றலும் பயனும் மாறுபடுகின்றன, வேறுபடுகின்றன, குறைகின்றன, மங்கித் தெரிகின்றன என்பதுதான் உண்மை. இதைப் போலவே, அருளுலகில் அருளாளர்கள் வழங்குகின்ற உருத்திராக்கம், சக்கரம், தாயத்து, முடிகயிறு, திருநீறு, குங்குமம் முதலிய பூசனைப் பொருட்களின் அருட் தரங்களும், அருளாற்றல்களும், அருட்பயன்களும் உண்டு, உண்டு, உண்டு. எனவே, **தங்களைப் போன்ற பத்தர்கள், பத்தியாளர்கள் அருளுலகின் பூசனைப் பொருட்களான திருநீறு, குங்குமம், முடிகயிறு, தாயத்து, உருத்திராக்கம், சக்கரம் முதலியவைகளைப் போலியென்றோ அல்லது பயனற்றதென்றோ அல்லது மடமையானதென்றோ குறை கூறுவதோ, குற்றம் சாட்டுவதோ, கேலி செய்வதோ கூடாது! கூடாது! கூடாது! கூடவே கூடாது!** இதைத் தாங்கள் புரிந்து கொள்வதோடு தங்களைச் சேர்ந்தவர்களுக்கும் புரிய

வைத்தாக வேண்டும், புரிய வைத்தாக வேண்டும், புரிய வைத்தாக வேண்டும். அதுதான் உங்களைப் போன்றோர்களின் தலையாய கடமை, முழுமுதற் கடமை. இக் கடமையை உணர்ந்தும் உணர்த்தியும் செயல்படுக.

(ஆ) உங்களுடைய சிந்தனைக்காக ஒன்றை இங்கே குறிப்பிட விரும்புகின்றோம். வடலூர் வள்ளல் பெருமானார் ஏன் திருநீறு மட்டும் அணிந்தார் என்பதையும், அவர் ஏன் குங்குமம், சந்தனம், சாந்து, மஞ்சள் முதலியவைகளை அணியவில்லை என்பதையும் பற்றி வினாவெழுப்பிச் சிந்தியுங்கள். பலரிடமும் கேட்டுப் பாருங்கள். அப்பொழுதுதான் உங்களுக்கெல்லாம் வடலூர் வள்ளல் பெருமானாரின் வாழ்வியலும், சாதனையும், போதனையும் உண்மையிலேயே தெரிந்திருக்கிறதா என்ற உண்மை புரியும்! புரியும்! புரியும்! என்று எமது குருபீடம் உங்களைப் போன்றோரின் மனம் புண்படாமல் மிகமிக மென்மையாகவும், நுண்மையாகவும், திண்மையாகவும், வன்மையாகவும் அறிவுறுத்துகிறது, அறிவுறுத்துகிறது, அறிவுறுத்துகிறது. இதன் மூலமாவது எமது குருபீடத்தின் அணுகுமுறையைப் புரிந்து கொள்ளுங்கள்.

21. தங்களின் அஞ்சலின் மூன்றாவது நாலாவது பக்கங்களில் 16, 17 பாராக்களில், *"...அடுத்து கடவுள் நிலையைப் பற்றிய முழுதும் தவறான கருத்துக்களை வெளியிட்டு இருக்கிறீர்கள். இதைப் பற்றி நேரில் பேசினால் தெளிவாக இருக்குமென நினைக்கிறேன்.*

*"உதாரணமாக கடவுள் பல உண்டு என்பதே பைத்தியக் காரத்தனம். அறிவு விளக்கமில்லாத செய்கையாகும்"* என்று மிகமிகக் கடுமையான வெறி நிறைந்த முரட்டுத் தனமான விமரிசனத்தை வழங்கி யிருக்கிறீர்கள். இத்துடன்,

*"தெய்வங்கள் பலபல சிந்தை செய்வாரும்..."* - என்ற ஒரு திருஅருட்பாவையும் சான்றாகக் காட்டியிருக்கிறீர்கள்.

விளக்கம்:-

(அ) வள்ளல் பெருமானாரின் பத்தரும், திருஅருட்பா பத்தருமாகிய வீர இளைஞனே! அன்பு கூர்ந்து இங்கு **கூறப்போகும் கடுமையான விமரிசனத்திற்காக வருத்தப் படாதே! கோபப் படாதே! மனத் தளர்ச்சியடையாதே! அடையாதே! அடையாதே! ஏனென்றால், நீயும், உன்னைப் போன்றுள்ளோரும் திருவருட்பிரகாச வள்ளல் அருட்பெருஞ்சோதி ஆண்டவர் வடலூர் வள்ளல் பெருமானாரிடத்தும்,**

**வள்ளல் பெருமான் திருவாய் மலர்ந்தருளிய திருவருட்பாவிடத்தும் மூடத்தனமான, கண்மூடித்தனமான, குருட்டுத் தனமான, வறட்டுத்தனமான, முரட்டுத்தனமான, வெறித்தனமான, பத்தி கொண்டிருப்பதால்தான், திருவருட்பிரகாச வள்ளல் பெருமானும், அவருடைய திருவருட்பாவும் உலகளாவிய புகழினைப் பெற முடியாமல் போய்விட்டது, புகழினைப் பெற முடியாமல் போய்விட்டது, புகழினைப் பெற முடியாமல் போய்விட்டது. இத்தகைய அவலக் கேவல நிலைகள் இனியும் தொடரக்கூடாது, தொடரக்கூடாது, தொடரக்கூடாது என்பதற்காகத்தான் எமது குருபீடமே பெரிதும் விரும்பி உன்னையும், உன்னைப் போன்றவர்களையும் மிகக் கடுமையாக விவரிக்க வேண்டி நேரிட்டு விட்டது. விவரிக்க வேண்டி நேரிட்டு விட்டது, விவரிக்க வேண்டி நேரிட்டு விட்டது. இந்த விவரிப்பு விமரிசனம் வெறும் விதண்டாவாதம் அல்ல, வெறும் விதண்டாவாதம் அல்ல, வெறும் விதண்டாவாதம் அல்ல. அதாவது, இதுதான் உண்மையான விவேகம் நிறைந்த விவாதம். இதுதான் உண்மையான விவேகம் நிறைந்த விவாதம். இதுதான் உண்மையான விவேகம் நிறைந்த விவாதம்.**

(ஆ) அதாவது நீயும் உன்னைப் போன்றவர்களும் வள்ளல் பெருமானின் கொள்கையையும் குறிக்கோளையும் உங்களுக்குப் புரிகின்ற ஓரிரு திருஅருட்பாக்களில் அங்கொன்றும் இங்கொன்றுமாக எடுத்துச் சான்று காட்டி விளக்கம் கூறிட முற்படுகிறீர்கள். இது எப்படி யிருக்கிறது என்றால் ஐந்து குருடர்கள் படுத்துக் கிடக்கின்ற யானையின் ஐந்து பக்கங்களில் நின்று அவரவர் கைக்கு அருகிலுள்ள துதிக்கை, காது, கால், வயிறு, வால் முதலியவைகளை மட்டும் தொட்டுப் பார்த்து யானை உலக்கை போல் இருக்கும், பானையைப் போல் இருக்கும், விளக்குமாறு போல் இருக்கும் என்று ஆளுக்கு ஒரு மாதிரியாக யானையின் வடிவத்தைப் பற்றி விளக்கம் கூற முற்பட்டதுபோல்தான் இருக்கிறது, இருக்கிறது, இருக்கிறது. இதுதான் உண்மை, உண்மை, உண்மை. இவற்றை எண்ணி வெட்கப் படுவதா? வேதனைப் படுவதா? வெட்கப் படுவதா? வேதனைப்படுவதா? வெட்கப்படுவதா? வேதனைப்படுவதா?

(இ) அருளுலக இருளகற்றும் பணியையும், பொருளுலக இன்னல் நீக்கும் பணியினையும் ஒருசேர நிகழ்த்தும் மாபெரும் அரிய பெரிய

பயன்மிகு பணிகளை ஆற்றப் புறப்பட்டிருக்கும் வீர இளைஞனே! உனக்குத் தெரிந்ததை எந்தவித ஆய்வோ, விசாரணையோ, நிதானமோ, பொறுப்போ, பொறுமையோ இல்லாமல் வெறும் உணர்வை மட்டும் அடிப்படையாகக் கொண்டு “எடுத்தோம்! கவிழ்த்தோம்!!” என்று செயல்படும் துடிப்பு மிக்க வீர இளைஞனே! உன்னுடைய பணிகளில் நிதானமும், உரிய பொறுப்பும், பொறுமையும் இனிமேலாவது ஏற்படுமேயானால் அதன்மூலம் நிறைய நற்பயன்கள் விளையும், விளையும், விளையும் என்று அறிவுறுத்தி உமது கருத்துக்களுக்கு விளக்கம் கூற முற்படுகிறது எமது குருபீடம்.

(ஈ) உன்னுடைய அஞ்சல் வாசகப்படி “*கடவுள் ஒருவரே என்பதாகும்*”. இந்தக் கருத்து, உலக அளவில், இந்துவேதத்தின் மூலம் மிகமிகத் தெளிவாக மறுக்கப்படுகிறது, மறுக்கப்படுகிறது, மறுக்கப்படுகிறது, மறுக்கப்படுகிறது, மறுக்கப்படுகிறது. இது தவறான கருத்து என்பதோடு விளக்கப் படுகிறது. எனவே, தாங்கள், பதினெண்சித்தர் மடத்தின் இந்து வேதத்தை முறையாகப் படிக்க வேண்டும், அல்லது பதினெண் சித்தர் மடத்தைச் சேர்ந்த சன்னிதானங்களை வரவழைத்து இந்துவேத விளக்கச் சொற்பொழிவுகளை நிகழ்த்தக் கூறிக் கேட்க வேண்டும், கேட்க வேண்டும், அல்லது பதினெண்சித்தர் மடத்தில் வந்து தங்கி அவ்வப்போது குருதேவர் வழங்கக் கூடிய அருளுரைகளையும், அறிவுரைகளையும், அருளார்ந்த அறிவுரைகளையும், அறிவார்ந்த அருளுரைகளையும் கேட்டுக் கேட்டுத் தயாராக வேண்டும், தயாராக வேண்டும், தயாராக வேண்டும். அதாவது, **“கடவுள் ஒருவரே என்ற கருத்து மிகமிகத் தவறான கருத்து, மிகமிகப் பிழையான கருத்து, ஒரு மாயமான கருத்து, ஒரு பயனில்லாத கருத்து, எள்முனையளவு கூட உண்மையில்லாத கருத்து”** என்று இந்து வேதம் கூறுகிறது.

♦ இந்த இந்துவேதம்தான் இந்த உலகின் “மூல வேதம்”.

♦ இந்த இந்துவேதம்தான் உலகின் “முதல் வேதம்”.

♦ இந்த இந்துவேதம்தான் உலகின் “முழுமையான வேதம்”.

♦ இந்த இந்துவேதம்தான் இந்த உலகில் “கடவுள்களாலேயே எழுதித் தரப்படுகின்ற வேதம்”.

♦ இந்த இந்துவேதம்தான் இந்த உலகிலேயே காலங்கள் தோறும் தேவைக்கேற்பத் தோன்றுகின்ற கடவுள்களாலேயே அவ்வப்போது விளக்கம் விரிவாக வழங்கப்பட்டு “மக்களைப் பாதுகாக்கின்ற வேதம்”.

♦ இந்த இந்துவேதம்தான் "மனிதர்களைக் கடவுள்களாக்குகின்ற வழிகளைக் கூறுகின்ற வேதம்".

♦ இந்த இந்துவேதம்தான் "கடவுள்களை அடிக்கடி நேரில் தோன்றியும், மனிதர்களாகப் பிறப்பெடுத்தும் மனிதர்களுக்கு உதவச் செய்யும் வேதம்".

♦ இந்த இந்துவேதம்தான் கோடிக்கணக்கான கடவுள்களை பல்வேறு பட்டியல்களுக்கு உட்படுத்தி கடவுள்கள் பற்றிய குழப்பங்களைத் தீர்த்து வைக்கிறது.

♦ இந்த இந்துவேதம்தான் "கடவுள்கள் பிறந்து கொண்டிருக்கிறார்கள், இறந்து கொண்டிருக்கிறார்கள், பிறப்பிறப்பற்ற பெருநிலை பெற்றுக் கொண்டிருக்கிறார்கள்" என்ற பேருண்மையினை விளக்குகிறது.

♦ இந்த இந்துவேதம்தான் "கடவுள்களில் ஆண்கள், பெண்கள், அலிகள் என்று மூன்று வகையினர் இருக்கின்றார்கள்" என்ற பேருண்மையை விளக்குகிறது.

♦ இந்த இந்துவேதம்தான் "கடவுள்களில் அருவங்கள், அருவ உருவங்கள், உருவ அருவங்கள், உருவங்கள் என்று நான்கு வகைப்பட்ட உருவ அமைப்புக்களை உடைய கடவுள்கள் இருக்கிறார்கள்" என்ற பேருண்மையினை விளக்குகிறது.

♦ இந்த இந்துவேதம்தான் "கடவுள்களில் தாங்களே தோன்றுகின்ற தான்தோன்றிக் கடவுள்கள் என்றும், அருளாளர்களால் தோற்றுவிக்கப்படுகின்ற கடவுள்கள் என்றும் இருபெரும் வகையினர் உண்டு" என்ற பேருண்மையினை விளக்குகிறது.

♦ இந்த இந்துவேதம்தான் "கடவுள்களில் விண்ணுலகக் கடவுள்கள் என்றும், மண்ணுலகக் கடவுள்கள் என்றும் இருபெரும் வகையினர் உண்டு" என்ற பேருண்மையினை விளக்குகிறது.

♦ இந்த இந்துவேதம்தான் "கடவுள்கள் தோன்றுகின்ற அடிப்படையில் திருக்கல், தருக்கல், கருக்கல், குருக்கல் என்று நான்கு வகைப்பட்ட கடவுள்கள் உண்டு" என்ற பேருண்மையினை மிகத் தெளிவாக விளக்குகிறது. அத்துடன் "இந்த நான்கு வகைப்பட்ட கடவுள்களும் தோன்றிக் கொண்டேயிருக்கிறார்கள்" என்ற பேருண்மையினையும் விளக்குகிறது. ....

இப்படிக் கடவுள்கள் பற்றிய பேருண்மைகளை மிக மிகத் தெளிவான கருத்து விளக்க சுருக்கச் சொற்றொடர்களாக நறுக்குத் தெரித்தாற்போல் விளக்குகிறது. இப்படிப்பட்ட **இந்துவேதம் பதினெண்சித்தர்களின்**

**தாய்மொழியான அருளுறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியில் மட்டுமே எழுதப்பட்டிருக்கிறது.** இந்தப் பதினெண்சித்தர்களின் தாய்மொழியான தமிழ்மொழி பதினெண்சித்தர்களின் இந்துவேதத்தில், **'அண்ட பேரண்ட அருளுலக ஆட்சிமொழியான அருளுறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழி** என்று பாராட்டப் படுகின்றது. இந்தத் தெய்வீகத் தமிழ்மொழியில்தான் வடலூர் வள்ளல் பெருமானுர் தமது திருஅருட்பாவை திருவாய் மலர்ந்தருளினுர். அந்தத் திருஅருட்பாவில் எப்படி இந்துவேதம் கூறுகின்ற பல கடவுள்கள் உண்டு என்ற கொள்கை மறுக்கப் பட்டிருக்கும்? எனவே, **உங்களைப் போன்றோர் திருவருட்பாவினை மீண்டும் மீண்டும் ஊன்றிப் படிக்க வேண்டுமே தவிர; அடுத்தவர்களைப் பார்த்து திருவருட்பா படியுங்கள் என்று கூறி நேரத்தை வீணுக்கிக் கொண்டிருக்கக் கூடாது.**

(உ) திருஅருட்பா விடத்து அளப்பரிய ஈடுபாடுடைய வீர இளைஞனே! திருஅருட்பா ஆறு திருமுறைகள் என்ற பகுப்புக்களை (பிரிவுகளை) உடையது. எனவே, ஆருவது திருமுறை மட்டும்தான் திருவருட்பா என்று கூற வேண்டாம் அல்லது கருத வேண்டாம். ஏனென்ருல், வடலூர் வள்ளல் பெருமானுர் தாம் வாழ்ந்த காலத்திலேயே சிதம்பரம் யாழ்ப்பாணத்துப் பெரும்புலவர் ஆறுமுக நாவலர் அவர்களோடு நீதிமன்றம் வரை போராடித் தமது பாக்களைத் திருவருட்பா என்ற பெயருக்கு உரியதாக ஆக்கிவிட்டுச் சென்ருர். அவர் நினைத்திருந்தால் தம்முடைய ஆருவது திருமுறை மட்டும்தான் திருவருட்பா என்று கூற வேண்டும் என்று அப்பொழுதே அறிவித்துச் சென்றிருப்பார். ஆனுல், அவர் அப்படிச் செய்யவில்லை. எனவே, ஆறு திருமுறைகளும் சேர்ந்துதான் திருஅருட்பா என்ற பெயரினைப் பெறுகின்றது. இதன்படிப் பார்த்தால், திருஅருட்பாவில் பிள்ளையார் வழிபாடு, முருகன் வழிபாடு, வடிவுடை மாணிக்கவல்லி வழிபாடு, சுமார் ஓர் ஐம்பதுக்கும் மேற்பட்ட ஊர்களிலுள்ள சிவன்களின் வழிபாடு, தில்லைப் பொன்மன்றில் திருநடனமிடும் நடராசப் பெருமான் வழிபாடு என்று பல கடவுள்களின் வழிபாடுகள் இருக்கின்றன. எனவே, **"திருவருட்பா ஒரே கடவுள் என்ற கொள்கையை மறுக்கிறது என்பதும், பல கடவுள்கள் உண்டு என்ற கொள்கையைத்தான் கூறுகிறது என்பதும் மிகமிகத் தெளிவாக விளங்குகிறது".**

(ஊ) அருமை நண்பா! தாங்கள் மிகவும் அவசரப்பட்டுத் தங்களுடைய அஞ்சலில் *"... உதாரணமாக கடவுள் பல உண்டு என்பதே பைத்தியக்-காரத்தனம், அறிவு விளக்கமில்லாத செய்கையாகும்"* - என்று நான்காம் பக்கத்தில் எழுதி விட்டீர்கள். இப்படித் **தாங்கள் எழுதியிருப்பது பதினெண்சித்தர்களின் கடவுட்கொள்கையை கண்டிப்பதாக மட்டும் அமைய வில்லை; தாங்கள் எந்நேரமும் வழிபடும் வடலூர் வள்ளல் பெருமானாரின் வாழ்வியலையே கண்டிப்பதாக அமைகிறது.**

அதாவது, தாங்கள் *"பல கடவுள்கள் இருக்கிறார்கள் என்பது தவறு, ஒரே ஒரு கடவுள்தான் இருக்கிறார்"* என்று கூறுவது உண்மையானால், தாங்கள் வழிபடும் வடலூர் வள்ளல் பெருமானார் தமது இளமைப் பருவத்திலேயே முருகப் பெருமானைக் கண்ணாடியில் கண்டது பொய்யாகும், அதைத் தவறு என்று கண்டிக்க வேண்டும். இதேபோல், திருவொற்றியூரில் வடிவுடைய மாணிக்கவல்லி அவருக்காக சர்க்கரைப் பொங்கல் எடுத்துக் கொண்டு அவருடைய வீடு தேடி வந்து கொடுத்துச் சென்ற நிகழ்ச்சியினைப் பொய் என்று கூற வேண்டும், அல்லது தவறானது என்று கண்டிக்க வேண்டும். அவர் தமது பாடல்களில் சிவபெருமான் தன்னைத் தேடிவந்து சித்திகள் பல வழங்கியதாகக் கூறுவதை யெல்லாம் பொய் என்றும், தவறான செய்திகள் என்றும் கண்டிக்க வேண்டும்.

> "நானே தவம் புரிந்தேன் நானிலத்தீர் அம்பலவன்
> தானே வந்தென்னைத் தடுத்தாண்டான்..."
>
> "சிந்தா குலம் தவிர்த்துச் சிற்றம்பலப் பெருமான்
> வந்தான் எனைத்தான் வலிந்தழைத்தான்...."
>
> "அம்மை திரோதை அருட்சத்தி வந்தனளே..."

இப்படிப் பல கடவுள்களை இராமலிங்க அடிகளார் தமது திருவருட்பாவில் குறிப்பிடுகிறார். எனவே, அவர் பல கடவுள்களைக் கண்டிருக்கின்றார் என்பதற்குரிய சான்றுகளும், சாட்சிகளும் அவராலேயே வழங்கப் பட்டிருக்கின்றது. இவற்றைத் தாங்கள் மறுக்க விரும்புகிறீர்களா? அல்லது எதிர்க்க விரும்புகிறீர்களா? அல்லது ஏக வசனத்தில் எமது குருபீடத்தைக் கண்டித்தது போல் வள்ளலாரையும் கண்டிக்க முன் வருகிறீர்களா? அன்பு கூர்ந்து யோசித்துப் பதில் கூறுங்கள். அவசரமில்லை. எமது குருபீடத்தை அருட்பா படிக்கச் சொன்ன தாங்கள் உடனடியாக அருட்பாவை உண்மையாகப் படிக்க ஆரம்பிப்பது நல்லது!

22. அருமை நண்பரே! இனிய தோழரே! திருவருட்பா நெறியினில் மிகுந்த வெறி கொண்ட வீர இளைஞனே! உன்னுடைய அஞ்சலின் நாலாவது பக்கத்திலுள்ள 18, 19, 20 எனும் மூன்று பாராக்களிலும் புதிதாக எந்தவோர் செய்தியும் இல்லை. **மற்ற மதத்தவர்களைப் போலவே தாங்களும் தங்களுடைய மதமான சமரச சுத்த சன்மார்க்கத்தின் கடவுளான அருட்பெருஞ்சோதி கடவுளையே சிறந்த கடவுள், உயர்ந்த கடவுள், தூய்மையான கடவுள், வாய்மையான கடவுள், மெய்யான கடவுள் என்று வெறி நிறைந்த வறட்டு வாதத்தை முரட்டுப் பிடிவாதமாக நிகழ்த்தி யிருக்கிறீர்கள். அதாவது, உங்களால் அருட்பெருஞ்சோதி ஆண்டவரைத் தவிர வேறு கடவுள்கள் இருப்பதை ஒப்புக் கொள்ள முடியவில்லை. இது சரியென்றால் கன்னியாகுமரி முனை முதல் இமயத்தின் முடிவரை உள்ள ஆயிரக் கணக்கான கடவுள்களின் கோயில்கள் இருந்த இடம் தெரியாமல் அழிக்கப்பட வேண்டும். அல்லது பயனற்றவை என்று ஒதுக்கப்பட வேண்டும். மேலும் நீங்கள் அன்றுடம் வழிபடும் வள்ளல் பெருமானுர் வழிபட்ட கந்த கோட்டம் முருகன் கோயில், (கோடம்பாக்கம்) வடபழனி முருகன் கோயில், திருத்தணிகை முருகன் கோயில், திருவொற்றியூர் சிவன் கோயில், வடிவுடைய மாணிக்கவல்லி கோயில், திருமுல்லைவாயில் ஈசுவரன் கோயில், கொடியிடை அம்மன் கோயில், பாடிச் சிவன் கோயில், தில்லைச் சிற்றம்பலத்தில் உள்ள நடராசப் பெருமான் கோயில் முதலிய அனைத்திலும் "கடவுள் இல்லை, கடவுள் இல்லை, கடவுளே இல்லை" என்ற அறிவிப்புப் பலகை எழுதி உங்கள் சார்பாகத் தொங்க விடப்பட வேண்டும். இதற்கு நீங்களும் உங்களைச் சார்ந்தவர்களும் தயாரா? தயாரா? தயாரா?**

23. அருமை நண்பா! ஆருயிர்த் தோழா! திருஅருட்பா நெறிச் செல்வ! வடலூர் வள்ளல் பெருமானின் பத்தா! சன்மார்க்க நெறியில் அளப்பரிய வெறி கொண்டுள்ள வீர இளைஞனே! தேன் கூட்டில் கை வைத்தது போல் பதினெண்சித்தர் மடத்தைத் தொட்டுள்ளாய். சுவைமிக்க அருளுலக விளக்கம் என்னும் தேன் கிடைத்திருக்கிறது இந்த அஞ்சல் வடிவில். இதனை நீயும் உன்னைச் சார்ந்தவர்களும் மருந்தாகவும், விருந்தாகவும் மெய்யான விருப்பத்தோடு பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அன்பு கூர்ந்து இந்த அஞ்சலில் உள்ள எந்த ஒரு சொல்லாலும் கருத்தாலும் புண்பட்டு விடக்கூடாது நீயும் உன்னைச்

சேர்ந்தவர்களும். அதனுலேயே **நீ உன் அஞ்சலில் எழுதிடாத எந்தவொரு கருத்துக்கும் விளக்கம் கொடுக்க முற்பட வில்லை யாம். அதாவது, சைவ அசைவக் கருத்துப் போராட்டத்தை எழுப்ப முன்வரவில்லை யாம்**. இது உன் போன்ருேர் நிலைக்குத் தேவையில்லாததாகும். அதாவது உங்களுக்கெல்லாம் இந்து வேதத்தைப் பற்றித் தெரியாது. எனவே, நீங்களும் உங்களைச் சேர்ந்தவர்களும் பதினெண்சித்தர் மடம் வெளியிட்டுள்ள இந்து வேதத்தில் ஒரு பகுதியை முதலில் வாங்கிப் படியுங்கள். அதன்பிறகு பதினெண்சித்தர் மடத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட வெளியீடுகளை வாங்கிப் படியுங்கள். நீங்களும் உங்களைச் சேர்ந்தவர்களும், நீங்கள் சார்ந்துள்ள நிறுவன நிர்வாகங்களும் பதினெண்சித்தர் மடத்தோடு தொடர்பு கொண்டு தமிழ்நாடெங்கும் இந்துவேத விளக்கக் கூட்டங்கள் நிகழ்த்திட முற்படுங்கள். ஏனென்ருல், இந்துவேதம் மிகத் தெளிவாக **“இந்த உலகில் தோன்றக் கூடிய வேதங்கள் அனைத்தும் இந்துவேதமெனும் ஆலமரத்தின் இலைகளாகவோ, கிளைகளாகவோ, விழுதுகளாகவோதான் தோன்ற முடியும்”** என்று கூறுகிறது. புரிந்தால் புரிந்து செயல்படுக.

அன்பு

**இந்துமதத் தந்தை, இந்துவேத நாயகம், இந்துவேதபீடம், இந்துமதத்தின் தலைமை ஆச்சாரியார், தலைமைக் குருபீடம்**

அவர்களுக்காக

**பதினெண்சித்தர் மடம் அறக்கட்டளை**

18.10.1991



**//ஈரோடு திரு கதிர்வேல் அவர்கள் பதினெண்சித்தர் மடத்திற்கு எழுதிய கடிதம்//**

அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை

ஈ.செ.கதிர்வேல், 821, பிரப் ரோடு, ஈரோடு-638001 பெரியார் மாவட்டம்

ஆன்ம நேய அன்புடைய சகோதரர்கள் அனைவருக்கும் வணக்கத்துடன் வரையும் மடல்.

எல்லா உயிர்களும் நலமுடன் இருக்க அருட்பெருஞ்சோதி ஆண்டவர் அருள்புரிவார்.

தாங்கள் அனுப்பிய அன்பு மடல் கிடைக்கப் பெற்றேன். விவரம் அறிந்தேன். தாங்கள் அனுப்பிய பத்திரிகைகளையும் ஒன்று விடாமல் படித்தேன். விவரம் அறிந்தேன்.

*எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும் அப்பொருள்*
*மெய்ப்பொருள் காண்பது அறிவு.* - **திருவள்ளுவர் வாக்கு**

இந்துமதத்தைப் பற்றியும் கடவுள் நிலையைப் பற்றியும் மிகவும் தவறான சிந்தனையுடன் எழுதியுள்ளீர்கள். சித்தர்கள் வரிசைப் பற்றியும் தவறான கருத்துக்களை எழுதியுள்ளீர்கள்.

இந்துமதம் என்பதற்கு வரலாறுகள் கிடையாது. மதம் பிடித்த மக்களே 'மதம்' என்ற அமைப்பை ஏற்படுத்தியுள்ளார்கள். வேதங்களை தோற்றுவித்த பெரியவர்களும் குற்றமுடையவர்களே. நான்கு வேதங்களும் மக்களை நல்வழிக்கு கொண்டு செல்லாமல், தவறான பாதைக்கு இட்டுச் சென்றுள்ளது.

சித்தர்களில் கருமசித்தர், யோகசித்தர், ஞானசித்தர் என மூன்று வகை சித்தர்கள் உண்டு. இதுவரையில் தோன்றிய சித்தர்கள் கோடிக்கணக்கானவர்கள். இவர்களில் ஒருசிலர் கடின சித்தர்களும், யோக சித்தர்களும் தங்களுக்குத் தெரிந்ததை உண்மைக்கு புறம்பான முறையில் சில கருத்துக்களை மக்களுக்கு அறிமுகப் படுத்தியுள்ளார்கள். ஆனால், ஞானசித்தர்கள் ஒருசிலரே தோன்றியுள்ளார்கள். அதிலே குறிப்பிடத் தக்கவர்கள் அகத்தியர், திருமூலர், திருவள்ளுவர், தாயுமானவர், வால்மீகி, வியாசர், சேக்கிழார், இறுதியாகத் தோன்றியுள்ள திரு அருட்பிரகாச வள்ளலார் போன்றவர்களே ஆவார்கள்.

இவர்கள், மக்களை சமுதாயத்தை நல்வழிப்படுத்த அரும்பாடுபட்டவர்கள். எப்பாடுபட்டும் மக்கள் இது வரையில் நல்வழிக்கு வந்ததாகத் தெரியவில்லை. இறுதியாக வந்த வள்ளல் பெருமான் ஒருவர்தான் முடிவான உண்மைகளை துணிவுடன் எடுத்துக் காட்டியுள்ளார். மனித சமுதாயத்திற்கு, நல்வாழ்விற்கு, முக்கிய தடைகளாக இருப்பது சாதி, மதம், சமயம், இனம், மார்க்கங்கள் என்பவை என்றும், சாதி மதம் சமயம் இனம் நாடு மார்க்கங்கள் யாவும் பொய்யானது, அவைகளை நம்ப வேண்டாம் என்று மிகவும் வலியுறுத்தியுள்ளார். உதாரணமாக,

*சாதியிலே மதங்களிலே சமய நெறிகளிலே*

*சாத்திரச் சந்தடிகளிலே கோத்திரச் சண்டையிலே*
*ஆதியிலே அபிமானித்து அலைகின்ற உலகீர்*
*அலைந்து அலைந்து வீணே நீர் அழிதல் அழகலவே*
*நீதியிலே சன்மார்க்க நிலைதனிலே ஞான*
*நிருத்தமிடும் தனித்தலைவன் ஒருத்தர் அவர்தாமே*
*வீதியிலே அருட் சோதி விளையாடல் புரிய*
*மேவுகின்ற தருணமிது கூவுகின்றேன் உமையே.*

என்று நம்மையெல்லாம் அழைக்கின்றார்.

சாதியாலும், மதத்தாலும், சமயத்தாலும், சாத்திரத்தாலும், கோத்திரத்தாலும், மனிதனை மனிதன் பிரித்து வைத்து வேற்றுமை உணர்வுகளால், உண்மை தெரியாது பல கருத்து வேறுபாட்டின் காரணமாக ஒருவரை ஒருவர் சண்டையிட்டு அழிந்து கொண்டு இருக்கிறார்கள். ஆதியிலே எவனோ? ஒருவன் செய்துவிட்ட அறியாமையின் கருத்தை மையமாகக் கொண்டு இன்றுவரையில் கண்முன் தெரியாமல் அலைந்து வீணே போய்விட்டார்கள். இனிமேலும் அப்படி தவறான பாதையில் போகாமல் எல்லார்க்கும் பொதுவான, நீதி தவறாத சுத்த சன்மார்க்கத்தில் சேர்ந்து ஞானமுள்ள கடவுளின் நேரடிப் பார்வையில், அருட்பெருஞ்சோதியே வந்து நமக்கெல்லாம் உண்மையை விளங்க வைக்க வருகின்றார், வாருங்கள் என்று ஞானசித்திபுரமான வடலூருக்கு அழைக்கின்றார்.

இப்படி உண்மைகள் ஒருபுறம் இருக்க நீங்கள் இன்னும் அறியாமையில் இருப்பதை நினைக்கும் பொழுது ஆன்ம நேய உரிமையினால் வருந்துகிறோம், வேதனைப்படுகிறோம். வள்ளல் பெருமான் உலக ரகசியங்கள் யாவையும் வெட்ட வெளிச்சமாக அனைவரும் தெரிந்து கொள்ள வேண்டுமென்ற பேராசையினால் தெள்ளத் தெளிவாக ‘திருஅருட்பா’ என்ற நூலின் வாயிலாக எழுதி வைத்துள்ளார். நீங்கள் அவசியம் வாங்கிப் படிக்க வேண்டும்.

இந்து வேதத்தினால்தான் சாதி, மத வேற்றுமைகளையும், போட்டி பொறாமைகளையும், சண்டை சச்சரவுகளையும், மதமாற்றச் செயல்களையும் அகற்றிட முடியும் என்று எழுதியுள்ளீர்கள். முற்றிலும் தவறு.

இன்று இந்தியாவில் நடந்து கொண்டு இருக்கும் இந்து முஸ்லீம் சண்டைகள், பங்காளதேச சண்டைகள், ராமர் கோயில், பாபர் மசூதி சண்டைகள், பஞ்சாப் தீவிரவாத சண்டைகள், இலங்கை இந்திய விடுதலைப் புலிகள் சண்டைகள், போராளிச் சண்டைகள், இன்னும் எத்தனை சாதிச் சண்டைகள் நடந்து கொண்டு இருக்கின்றது. இதற்கெல்லாம் காரணகாரியம் என்ன? யார்? மதம் என்ற வெறியர்களின் அறியாமையால் மதம் பிடித்து ஆடுகின்றார்கள்.

*எய்வகை சார் மதங்களிலே பொய்வகைச் சாத்திரங்கள்*
*எடுத்துரைத்தே எமது தெய்வம் எமது தெய்வம் என்று*
*கைவகையே கதறுகின்றீர் தெய்வம் ஒன்றென்றறியீர்*
*களிபிடித்துக் கலகமிட்டப் பெரியரிலும் பெரியீர்*

என்று நம்மை யெல்லாம் பார்த்து சாடுகிறார் வள்ளல் பெருமான். இதை யெல்லாம் தெரிந்து கொள்ளாமல் தாயத்து, சக்கரங்கள், மந்திர தந்திரங்கள்,

முடிகயிறு, உருத்திராட்ச மாலே போன்ற போலிச் செய்கைகளினுல் மனித சமுதாயத்தை நல்வழிகளுக்குக் கொண்டுவர இயலாது.

உண்மை ஒழுக்கம், உண்மை இரக்கம், உண்மை தயவு, உண்மை அறிவு, உண்மைக் கடவுள், உண்மை செய்கை, உண்மை வழிகளின் மூலமாக வாழ்ந்து காட்டி எல்லவரையும் நல்லவர்களாக வாழ வைக்க வேண்டும்.

அடுத்து கடவுள் நிலேயைப் பற்றிய முழுதும் தவருன கருத்துக்களே வெளியிட்டு இருக்கிறீர்கள். இதைப் பற்றி நேரில் பேசினுல் தெளிவாக இருக்குமென நினேக்கிறேன்.

உதாரணமாக கடவுள் பல உண்டு என்பதே பைத்தியக்காரத்தனம். அறிவு விளக்கமில்லாத செய்கையாகும்.

*தெய்வங்கள் பலபல சிந்தை செய்வாரும்*
*சேர்கதி பலபல செப்புகின்ருரும்*
*பொய்வந்த கலேபல பகன்றிடுவாரும்*
*பொய்ச்சமயாதியை மெச்சுகின்ருரும்*
*மெய்வந்த திருவருள் விளக்க மொன்றில்லார்*
*மேல் விளேவு அறிகிலர் வீண் கழிக்கின்ருர்*
*எய்வந்த துன்பொழித்து அவர்க்கு அறிவு அருள்வீர்*
*எனேப்பற்றி யெழுப்பி மெய் இன்பந்தந்தீரே*

என்று தெளிவாக நமக்கெல்லாம் தெரிவிக்கின்ருர்

நீங்கள் நினேக்கின்ற கடவுள்கள் நிலே வேறு, அவர்களெல்லாம் தத்துவங்கள், தத்துவங்களே கடவுள்களாக கதையாக்கி மக்களுக்கு தெரியப் படுத்தி இருக்கிருர்கள்.

*எவ்வுலகில் எவ்வெவர்க்கும் அருட்பெருஞ்சோதியரே*
*இறைவர் என்பது அறியாதே இம்மதவாதிகள்*
*கவ்வைபெறு குருடர் களிகண்ட கதை போலே*
*கதைக்கின்ருர் சாகாத கல்வி நிலேயறியார்*

என்று விளக்கமாக தெரிவிக்கின்ருர். ஆதலால், ஆன்ம நேய அன்புடைய சகோதரர்களே, இது வரையில் உண்மை தெரியாமல் வீண் காலம் கழித்து விட்டீர்கள். இனிமேலாவது, உண்மை நெறிக்கு வந்து உலக உண்மைகளே தெரிந்து தெளிந்து தீய நம்பிக்கைகளுக்கு இடந் தராமல் ஒழுக்க நெறிகளே கடைப்பிடித்து பேரின்ப நிலேயை அடைய முயற்சி செய்யுங்கள். நலமுடன் வாழலாம்.

*ஆதி அந்தமும் இல்லதோர் அம்பலத்தாடும்*
*சோதி தன்னேயே நினேமின்கள் சுகம்பெற விழைவீர்*
*நீதி கொண்டு உரைத்தேன் இது நீவிர் மேலேறும்*
*வீதி மற்றைய வீதிகள் கீழ்ச் செல்லும் வீதி.*

நன்றி -

ஈ.செ. கதிர்வேல்

**வடலூர் இராமலிங்க அடிகளாரைப் (5-10-1823 - 30-1-1874) பற்றி ஒரு சில வரிகளில்...**

1) அவர் இம்மண்ணுலகில் தோன்றிட்ட 48 வகையான அருளாளர்களில் மண்ணையும் பெண்ணையும் பொன்னையும் வெறுக்கும் ஞானசித்தர் வகையில் தோன்றி; இந்த ஞானசித்தர்களின் பட்டியலில் எவருமே வாழாத மிகப் பெரிய அரிய சீரிய நேரிய அருள்வாழ்வு வாழ்ந்து காட்டியவர்.

2) வேதாகமங்கள் சாத்திறங்கள், சாதிசமயக் கோத்திரச் சண்டைகள் முதலிய வடஆரியத் தீமைகளை, ஏமாற்றுக்களை, மாயைகளை தெளிவாகவும், நேரடியாகவும் கண்டித்தவர்.

3) பத்தி நெறியில் உள்ளவர்களுக்கு உணர்வு, மனம், சிந்தை, உடல் முதலியவை படிப்படியாக அமைதி பெற்றுப் பக்குவப் படுவதற்குரிய மந்திரங்களாகவே பல்லாயிரக் கணக்கான இனிமை மிக்க அருட்பாக்களைப் பாடியவர்.

4) இவர் ஒருவர்தான் தமக்கேற்பட்ட தோல்வியைப் பணிவாக வெளிப்படையாக ஒப்புக் கொண்டு ‘கடை விரித்தோம், கொள்வாரில்லை; நிற்போர் நிற்க யாம் ஏகுகிறோம்’ என்று கூறியவர்.

5) தமிழினம் பெருமைப் படும் அளவிற்கு அண்மைக் காலத்தில் வாழ்ந்து சென்ற மிகப் பெரிய அருளாளரே இவர்.

6) இவர் ‘சித்தர் வருகின்ற தருணமிது, வரம் பெறலாம் நீவிர்’ என்று சிறப்பாகப் பதினெண்சித்தர் பீடாதிபதியின் வருகையை உலகுக்கு அறிவித்தவர்.

7) இந்துமத வழிபாட்டு நிலையங்களின் செயலற்ற பயனற்ற தன்மைகளைக் கண்டு அனுவசியமாகப் போராடாமல் புதிய வகையான ‘சன்மார்க்க சங்கத்தை’, ‘அருள்ஞானத் திருச்சபையை’, ‘அருட்பெருஞ்சோதி வழிபாட்டு மன்றத்தை’ உருவாக்கினர்....



11வது ஞானச்சாரியார், தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார். இவரே தமிழின மொழி மத விடுதலை இயக்கத் தலைவராகச் செயல்பட்டு தமிழின அருட்பேரரசான பிற்காலச் சோழப்பேரரசை (கி.பி.785 - கி.பி.1279) உருவாக்கினார்.

இவருக்கு அடுத்துப் பீடாதிபதியாகப் பட்டமேற்ற 12வது ஞானச்சாரியார் ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் அவர்களின் எழுத்துக் குவியல்களிலிருந்து சிலவற்றை இந்தச் சுற்றறிக்கையின் மூலம் வழங்குகின்றோம்.

சென்னை செங்குன்றத்தை அடுத்த காரனோடையில் குருதேவர் அமைத்த சித்தர் கோயிலில் மட்டுமே உள்ள அம்மையப்பர் வடிவம்.



Published on behalf of His Holiness 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Gnaalaguru Siddhar Arasayogi Karuvooraar.
Published by Mr Sivaraman, Kamarajarpuram, East Tambaram. Cell: 09840730609
Printed at Kavin Printers, Madurai

www.gurudevar.org Email: indhuism@gmail.com